email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

K.A.S. ZAINULABDIN & CO
LOCK BRAND
பூட்டு மார்க்
பூட்டு மார்க்
• கைலிகள்
• பனியன்கள்
• ஜட்டிகள்
தயாரிப்பாளர்கள் :
K.A.S. ஜெய்னுல்ஆப்தீன் & கோ
எண்.196, அங்கப்பன் தெரு, சென்னை - 600 001.
P: 91 44 25260483, Web: www.kasz.in

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

யாதும் ஊரே! யாவரும் கேளீர்!
சிந்தனைச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யதுஅகமது B.Com,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி:9940041157,இணையதளம்:www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-14 ஹிஜ்ரி 1434 ரஜப் - 24 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 வைகாசி-21 சென்னை 4-6-2013 செவ்வாய் வெளியூர் 5-6-2013 புதன்







## செயலாளர் முனைவர் காஜா நஜ்முத்தீன் முன்னிலையில்

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வராக முனைவர் ஏ.எம்.முகம்மது ஜிந்தாஷா பதவி ஏற்பு

## பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன் வாழ்த்து

திருச்சி ஜூன் 4–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் புதிய முதல்வ ராக முனைவர் ஏ.எம்.முஹம் மது ஜிந்தாஷா கல்லூரி செயலாளர், முனைவர், காஜா நஜ்முத்தீன் பதவி ஏற்றுக் கொண்டார். புதிய கல்லூரி முதல்வருக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் தலைவர், முனீருல் மில்லத் பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன், தொலை பேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து கூறினார்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வர் முனைவர் காதர் மொய்தீன்மே 31–ம் தேதி அன்று ஒய்வு பெற்றார் இதனை அடுத்து கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு கூட்டத்தில், கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் காதர் மொய்தீன் எம்.பி.ஏ. துறைத் தலைவராகவும் கணினித் துறைத் தலைவர் முனைவர் எஸ்.இஸ்மாயில் மொய்தீன் கல்லூரியின் நிதி ஆலோசக ராகவும் முனைவர் முஹம்மது இப்ராஹிம் கல்லூரியின் கூடுதல் துணை முதல்வராகவும் கல்லூரி முன்னாள் துணை முதல்வர் முனைவர் பி.என்.பி. ஷகாபுதீன் விடுதிகளின் இயக் குநராகவும் புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர்.

கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் காதர் மொய்தீன் முதல்வராக பணியாற்றிய காலத்தில் செய்த பணிகளை அனைத்து துறைத் தலைவர் களும் பேராசிரியர்களும் வெகுவாக பாராட்டினார்கள்.

ஆட்சி மன்றக் குழுவின் முடிவின்படி புதிய முதல்வ ராக கல்லூரி செயலாளர் முனைவர், காஜா நஜ்முத்தீன் முன்னிலையில் கல்லூரி முதல்வராக முனைவர் ஏ.எம். முஹம்மது ஜிந்தாஷா பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதே போல கல்லூரி துணை முதல்வராக முனைவர் முஹம்மது சாலிகு, கல்லூரி செயலாளர் முன்னிலையில் பொறுப் பேற்றுக் கொண்டார் கல்லூரி முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆசிரியருக்கு கல்லூரி தாளாளர் மற்றும்செயலாளர் முனைவர் காஜா நஜ்முத் தீன், கல்லூரியின் பொருளாளர் ஹாஜி கலில் அஹமது, கல்லூரி சுய நிதி பிரிவு இயக்குநர் கே.என். அப்துல் காதர் நிஹால், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துல் சமது, கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள் ஹாஜி ஷேக் முஹம்மது, முனைவர் காதர் மொய்தீன், எம்.ஐ.டி. கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் மன்சூர், மற்றும் அனைத்து துறை பேராசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் வாழ்த்துக் கூறினர்.

-TPTC Edition-

# தினமலர்

நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்

திருச்சி • புதன் • ஜூன் 5 2013

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

16 பக்கம் 400 காசு • மலர் 62 • இதழ் 272

ஜி.வி.என். மருத்துவமனை

ஸ்ரீ விஜயா பிரைவேட் (பி) லிட்.

No.70, மதுரை ரோடு, திருச்சி-8. ☎ 2707605, 2707505

# JAMAL MOHAMED COLLEGE
# AYESHA GIRLS MATRIC.HR.SEC.SCHOOL

7A, Race Course Road, Khaja Nagar, Tiruchirappalli-20

Ph: 0431-2331021, Cell: 90470-81455

**The Management, Principal and Staff Congratulate the High Achievers of our School in the Xth-Std (SSLC) Public Examination**

| 1st Mark | 2nd Mark | 3rd Mark |
|---|---|---|
|  |  |  |
| E. AMEETA CARMELS | S. AAMEENA NASRIN | B.KARTHIKA |
| 475/500 | 474/500 | 458/500 |



Principal

**100% Result in Xth - Standard Public Examination in 2012-2013 by the grace of Almighty**



Secretary & Correspondent

**Admission open for XIth - Std**

-: GROUPS OFFERED : -

1. Physics, Chemistry, Mathematics, Biology
2. Physics, Chemistry, Mathematics, Computer Science
3. Commerce, Accountancy, Economics, Computer Science
4. Commerce, Accountancy, Economics, Business Mathematics

**WANTED :** P.G.Teachers for English and Physical Education. Minimum 3 Years Experience

Since 1951

# JAMAL MOHAMED COLLEGE

**(AUTONOMOUS)**

**College with Potential for Excellence**

**Accredited with 'A' Grade by NAAC-CGPA 3.6 out of 4.0**

**(Affiliated to Bharathidasan University)**

**TIRUCHIRAPPALLI – 620 020**

## Swearing-in Ceremony of the new Principal and his team held at 5.30 p.m. on 31.05.2013



Dr.A.M.Mohamed Sindhasha takes the charge as Principal with the blessings of Treasurer Haji.K.A.Khaleel Ahamed



Dr.A.K.Khaja Nazeemudeen, Secretary & Correspondent adorns shawl to the Principal



Haji.K.A.Khaleel Ahamed, Treasurer honoring Dr.S.Mohamed Salique, Vice Principal



Prof.N.Abdul Samadh, Former Principal adorns shawl to Dr.A.Mohamed Ibraheem, Addl. Vice Principal



Dr.K.Abdus Samad, Director (MBA) honours Dr.S.Ismail Mohideen, Bursar



Prof.K.N.Abdul Kader Nihal, Director (SF) honouring Dr.S.M.Mazhar Nazeeb Khan, COE



Principal and the new team with the Management Committee

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

Cable: MONOPOLY POST BOX No. 3748
**Majestic Motors**
117, GENERAL PATTERS ROAD,
CHENNAI-600 002.
Ph: 28600937 - 28600938

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
சிந்தனைச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com.,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி:9940041157,இணையதளம்: www.vedakkukottaiyar.com

மணி-27 சுடர்-32 ஹிஜ்ரி 1434 ஷஃபான் - 12 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆனி-8 சென்னை 22-6-2013 சனி வெளியீடு 23-6-2013 ஞாயிறு




திருச்சி ஜமால் முகமது கல்லூரி வளாகத்திலுள்ள அப்துல் கபூர் ஆடிட்டோரியத்தில் கல்லூரி முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு தொடக்க விழாவில் கல்லூரி செயலர் முனைவர் ஏ. கே. காஜா நஜீமுதீன் பேசிய போது எடுத்த படம். அருகில் கல்லூரி பொருளாளர் கே.ஏ.கலீல் அகமது, கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா, துணை முதல்வர் முனைவர் எஸ்.முகமது சாலிஹ், கூடுதல் துணை முதல்வர் முனைவர் ஏ. முகமது இப்ராகிம், கல்லூரி சுயநிதிப்பிரிவு இயக்குநர் பேராசிரியர் கே.என். அப்துல் காதர் நிஹால் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு தொடக்க விழா

திருச்சி, ஜூன் 22–

திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு தொடக்க விழா கல்லூரி செயலர் முனைவர் ஏ.கே.காஜா நஜீமுதீன், கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம். முகமது சிந்தாஷா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு தொடக்க விழா கல்லூரி வளாகத்திலுள்ள அப்துல் கபூர் ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா தலைமை வகித்து பேசினார். கல்லூரி பொருளாளர் கே.ஏ.கலீல் அகமது, உதவிச் செயலர் எம்.ஜே. ஜமால் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜீமுதீன், ஆகியோர் கலந்து கொண்டு எதிர்கால திட்டங்கள் குறித்து எப்படியெல்லாம் மாணவர்கள் படிப்பில் முன்னேற வேண்டும் என்று அறிவுரை கூறினர்.

தொடக்க விழாவில் அனைத்து துறை தலைவர்களை கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா அறிமுகப்படுத்தினார;.

விழாவில் துணைமுதல்வர் முனைவர் எஸ்.முகமது சாலிஹ், கூடுதல் துணை முதல்வர் முனைவர் ஏ. முகமது இப்ராகிம், கல்லூரி சுயநிதிப்பிரிவு இயக்குநர் பேராசிரியர் கே.என். அப்துல் காதர் நிஹால், மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர் கே. அப்துஸ் சமது, துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

LOCK BRAND
பூட்டு மார்க்
• கைலிகள்
• பனியன்கள்
• ஜட்டிகள்
தயாரிப்பாளர் : K.A.S. ஜெய்னுல்ஆப்தீன் & கோ

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

இஸ்லாம் எங்கள் வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி
சமுதாயச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ் வ.மு.செய்யது அகமது
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை

மணி-27 சுடர்-35 ஹிஜ்ரி 1434 ஷஅபான் - 15 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆனி-11 சென்னை 25-6-2013 செவ்வாய் வெளியீடு 26-6-2013 புதன்




திருச்சி ஜமால் முகமது கல்லூரி வளாகத்திலுள்ள அப்துல் கபூர் ஆடிட்டோரியத்தில் மகளிர் கல்லூரி முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு தொடக்க விழாவில் சிங்கப்பூர் டி.என்.எச். கன்சல்டன்சி ஆடிட்டர் முகைதீன் அப்துல்காதர் பேசிய போது எடுத்த படம். அருகில் கல்லூரி செயலர் முனைவர் ஏ. கே. காஜா நஜீமுதீன், உதவி செயலர் எம்.ஜே. ஜமால் முகமது, கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா, துணைமுதல்வர் முனைவர் எஸ்.முகமது சாலிஹ், கூடுதல் துணை முதல்வர் முனைவர் ஏ. முகமது இப்ராகிம், கல்லூரி சுயநிதிப்பிரிவு இயக்குநர் பேராசிரியர் கே.என். அப்துல் காதர் நிஹால் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி மகளிர் முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு தொடக்க விழா

திருச்சி, ஜூன் 25—

திருச்சி ஜமால் முகமது கல்லூரி மகளிர் முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு தொடக்க விழாவில் கல்லூரி செயலர் முனைவர் ஏ.கே.காஜா நஜீ முதீன், சிங்கப்பூர் டி.என்.எச் கன்சல்டன்சி ஆடிட்டர் முகைதீன் அப்துல்காதர் ஆகியோர் சிறப்பு விருந்தின ராக கலந்து கொண்டனர்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி மகளிர் முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு தொடக்க விழா கல்லூரி வளாகத்தி லுள்ள அப்துல் கபூர் ஆடிட் டோரியத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரிமுதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா தலைமை வகித்து பேசினார். கல்லூரி பொரு ளாளர் கே.ஏ.கலீல் அகமது, உதவி செயலர் எம்.ஜே. ஜமால் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவிற்கு சிறப்பு விருந் தினராக கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜீமுதீன், சிங் கப்பூர் டி.என்.எச் கன்சல்டன்சி ஆடிட்டர் முகைதீன் அப்துல் காதர் ஆகியோர் கலந்து கொண்டு எதிர்கால திட்டங்கள் குறித்து எப்படியெல்லாம் மாணவிகள் படிப்பில் முன்னேற வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள்.

தொடக்க விழாவில் அனைத்து துறை தலைவர் களை கல்லூரி முதல்வர் முனை வர் ஏ.எம்.முகமது சிந்தாஷா அறிமுகப்படுத்தினார்.

விழாவில் துணைமுதல்வர் முனைவர் எஸ்.முகமது சாலிஹ், கூடுதல் துணை முதல்வர் முனைவர் ஏ. முகமது இப்ராகிம், கல்லூரி சுய நிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் கே.என். அப்துல் காதர் நிஹால், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் கே. அப்துஸ் சமது, துறைத் தலைவர்கள், பேராசிரி யர்கள், மாணவிகளின் பெற் றோர்கள் கலந்து கொண்டனர்.



email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

Cable: MONOPOLY POST BOX No. 3748
**Majestic Motors**
117, GENERAL PATTERS ROAD,
CHENNAI-600 002.
Ph: 28600937 - 28600938

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
சிந்தனைச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com.,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி:9940041157, இணையதளம்:www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-41 ஹிஜ்ரி 1434 ஷஅபான் - 21 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆனி-17 சென்னை 1-7-2013 திங்கள் வெளியீடு 2-7-2013 செவ்வாய்






## பரமக்குடி இஸ்லாமிய சமூகநல அறக்கட்டளை சார்பில் விழா:

# பள்ளி இறுதித் தேர்வுகளில் சாதனை படைத்த முஸ்லிம் மாணவ-மாணவியருக்கு பரிசளிப்பு

## 320 பேர் பரிசு பெற்றனர்

பரமக்குடி, ஜூலை 1–

இராமநாதபுரம் மாவட்டடம், பரமக்குடி, இஸ்லாமிய சமூக நல அறக்கட்டளையின் சார்பாக பரமக்குடி கல்வி மாவட்டத்தில் 2012–2013 ஆம் கல்வியாண் மேனேஜிங் டிரஸ்டி ஜெ.ஹிதாயத்துல்லா அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பரமக்குடி கீழப்பள்ளிவாசல் ஜமாத் சபையின் தலைவர் ஏ.முகம்மது ஷரிப், மேலப் வகையான ஆற்றலைப் பற்றி எளிமையான முறையில் எடுத்துரைத்தார்.

திருச்சி, ஜமால் முகம்மது கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர். ஏ.கே.

2012–2013 ஆம் கல்வியாண்டில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற இஸ்லாமிய மாணவ–மாணவியர்களுக்கு பாராட்டு மற்றும் பரிசளிப்பு விழா 29.06.2013 சனிக்கிழமை பரமக்குடி ராஜா திருமண மஹாலில் நடைபெற்றது.

விழாவிற்கு அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகரும், பரமக்குடி கீழமுஸ்லிம் மேல்நிலைப் பள்ளியின் தாளாளருமான எம்.சாதிக்அலி தலைமையேற்று நடத்தினார். அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகர்களான ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் ஹாஜி. நல்லாசிரியர்.டி.எம்.ஷேக்தாவுது, ஓய்வு பெற்ற பூச்சியல் வல்லுநர் ஹாஜி.என்.ஜலீல், ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் ஹாஜி. எஸ்.சிகாபுதீன், மாலி மொபைல்ஸ் உரிமையாளர் கே.அப்துல் மாலிக் எம்.சி, ஹபீப் சேம்பர் உரிமையாளர் ஹாஜி கே.ஜலீல் கான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பரமக்குடி கீழப்பள்ளிவாசல் இமாம் ஹாஜி.ஏ.எஸ். ஜலா லுதீன் மன்பஈ கிராத் ஓதி துவக்கி வைத்தார். அறக்கட் டளையின் ஏ.முகம்மது ஷரிப், மேலப் பள்ளிவாசல் ஜமாஅத் சபையின் தலைவர்.எஸ். அப்துல் கபூர், எமனேஸ்வரம் பள்ளிவாசல் ஜமாஅத் சபையின் தலைவர் ஏ.ஜெ.ஆலம், தெற்கு பள்ளி வாசல் ஜமாஅத் சபையின் தலைவர் எச்.முகம்மது இக்பால், பாரதிநகர் பள்ளிவாசல் ஜமாஅத் சபையின் தலைவர் ஏ.கமால், ரயில்வே பீடர் பள்ளிவாசல் ஜமாஅத் சபையின் தலைவர் ஒய்.பஷிர் முகம்மது, எஸ்.ஆர். பட்டினம் பள்ளிவாசல் ஜமாஅத் சபை தலைவர் ஏ.அப்துல் கபூர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

## டாக்டர் சேமுமு. –டாக்டர் ஏ.கே.காஜா நஜ்முதீன்

விழாவில் தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் முனைவர்.சேமுமு. முகம்மது அலி கலந்து கொண்ட மாணாக்கர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும், ஒரு மாணவன் சிறந்து விளங்க எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான அதாவது ஒரு மாணவனுக்கு இருக்க வேண்டிய ஏழு செயலாளர் முனைவர். ஏ.கே. காஜா நஜிமுதீன், 12 ஆம் வகுப்பில் முதல் இடம் பிடித்த மாணவிக்கு ரூ.5,000 ரொக்கப் பரிசும், இரண்டாம் இடம் பிடித்த மாணவிக்கு ரூ.3,000 ரொக்கப் பரிசும், மூன்றாம் இடம் பிடித்த மாணவனுக்கு ரூ.2,000 ரொக்கப் பரிசும் வழங்கினார். மேலும் மாணவ–மாணவியர்களுக்கு டாக்டர் மற்றும் என்ஜினியரிங் படிப்பு தவிர வேலைவாய்ப்பு அதிகம் உள்ள உயர் படிப்புகள் என்னென்ன உள்ளன – அப்படிப்புகள் எங்கெங்கெல்லாம் உள்ளன என்று கூறினார்.

விழாவில் பரமக்குடி கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் சி.சலீம், பரமக்குடி கீழமுஸ்லிம் மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் முனைவர் எம்.அஜ்மல்கான், முதுகுளத்தூர் பள்ளிவாசல் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் ஒ.ஏ.முஹம்மது சுலைமான், முதுகுளத்தூர் இஸ்லாமிய கல்வி பயிற்சி மையத்தின் முதல்வர் எம். முகம்மது சுல்தான் அலாவுதீன், தொழிலதிபர் கே.ஜான் முகம்மது, அபிராமம், முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியின் உதவித் தலைமையாசிரியர் அன்சாரி ஆகியோர் கலந்து கொண்டு மாணவ–மாணவியர்களை வாழ்த்திப் பேசினர்.

விழாவில் பனிரெண்டாம் வகுப்பில் 36 மாணவ–மாணவியர்களும், பத்தாம் வகுப்பில் 283 மாணவ–மாணவியர்களும் அதிக மதிப்பெண்கள் பெற்றனர். இவர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.

அறக்கட்டளையின் கல்வி ஆலோசகர் கே.ஏ.ஹிதாயத்துல்லா நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். அறக்கட்டளையின் நான்கு ஆண்டு செயல்பாடுகளை அறக்கட்டளையின் டிரஸ்டி வ.நூருல் அமீன் வாசித்தார். மாணவ–மாணவி யர்களின் பரிசு பட்டியலினை டிரஸ்டிகள் கே.அஸ்கர்அலி, எச்.அஹமது தையுப், ஐ.ஷேக் அப்துல் காதர் ஆகியோர் வாசித்தனர்.

இறுதியாக அறக்கட்டளையின் பொருளாளர் ஏ.முஹம்மது சபீக் நன்றி கூறினார்.





email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

Cable: MONOPOLY POST BOX No. 3748
**Majestic Motors**
117, GENERAL PATTERS ROAD,
CHENNAI-600 002.
Ph: 28600937 - 28600938

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
சிந்தனைச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com.,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-41 ஹிஜ்ரி 1434 ஷஅபான் - 21 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆனி-17 சென்னை 1-7-2013 திங்கள் வெளியூர் 2-7-2013 செவ்வாய்

# ஆங்கில வழியில் அரபி கற்க புதிய மென்பொருள்: திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் அறிமுகம்

திருச்சி, ஜூலை 1–

கணினி வழியில் அரபி மொழியை கற்பதற்காக ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவரும், அரபி மொழியின் மீது அளப்பரிய பற்று கொண்டவரும், மலேசியா, கோலாலம்பூரில் கான்சாப் என்ற மென்பொருள் நிறுவனத்தின் நிறுவனரும் மற்றும் இயக்குநருமான எம். நஸ்ருல்லாஹ்கான், ஆங்கில வழியில் அரபி மொழி கற்றலை உலகமயமாக்குதல் என்ற மென்பொருளை உருவாக்கி வடிவமைத்துள்ளார்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் கணினி அரங்கத்தில் 27–6–13 அன்று காலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நஸ்ருல்லாஹ்கான் வழங்க பிரதியை கல்லூரி செயலாளர் முனைவர் ஏ. காஜா நஜ்முதீன் பெற்றுக் கொண்டார்.

தான் வடிவமைத்து வெளியிடும் மென்பொருளை பற்றி கூறுகையில், அரபி மொழி கற்றலையும், கற்பித்தலையும் பரவலாக்கி உலகளவில் குறைந்த முயற்சியில், கால அவகாசத்தில் நவீன முறையில் அரபி மொழியை விளங்கிக் கொள்ளவும், பேசவும், படிக்கவும் கற்பித்தலே இந்த மென்பொருளின் நோக்கமாகும்.

மேலும், அரபி மொழியை உலகில் உள்ள பல மொழிகளின் வழியாக கற்றுக்கொள்ளவும், பல உலக மொழிகளை அரபு மூலமாக கற்றுக் கொள்ளவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருளின் சிறப்பு அம்சங்கள்

1. இலக்கண குறிப்புகளுக்கு தனி நிறம் கொடுக்கப்பட்டுள்ளது.

2. மவுஸை கொண்டோ அல்லது விரலை கொண்டோ திரையை தொடுவது கொண்டு எழுத்துப் பயிற்சி எடுத்துக் கொள்ள முடியும்.

3. அரபி மொழி கற்கும் போது ஆங்கில மொழி ஆற்றலை மேம்படுத்த முடியும்.

4. இதனை கற்றுக் கொள்ள கணினி பயிற்சி தேவையில்லை. பேனாவோ, காகிதமோ, எழுத்துப் பலகையோ தேவையில்லை. ஆசிரியர்கள் வகுப்பறையில் நடந்து கொண்டே கற்பிக்க முடியும். தொடு துறை கணினியில் இயங்கும்.

மேலும், இந்த அரபி மொழி கற்றல் மென்பொருள் மதீனா இஸ்லாமிய பல்கலைக்கழகம், இண்டர் நேஷனல் இஸ்லாமிக் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா, புருணை, இந்தியா, இலங்கை போன்ற உலகளாவிய நிலையில் உள்ள பல பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் அரபு மொழி வல்லுநர்கள் பார்வையிட்டு சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள்.

மென்பொருள் பிரதியை பெற்றுக் கொண்டு பேசிய கல்லூரி செயலாளர், ‘இந்த நிகழ்ச்சி நமது கல்லூரியில் பயின்ற – பயிலும் மாணவர்கள் கல்லூரி மீது கொண்டுள்ள பற்றுக்கு ஓர் உதாரணமாகும்.

கல்லூரி நிறுவப்பட்ட ஆரம்ப காலத்தில் இக் கல்லூரியில் பயின்ற நஸ்ருல்லாஹ்கான் அரபி மொழி மீது கொண்ட பற்றின் காரணமாக இந்த மென்பொருளை உருவாக்கியுள்ளார். அரபி மொழியை கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் இந்த மென்பொருள் பயனுள்ளதாக அமையும் என்றார்.




ஜமால் முகம்மது கல்லூரி தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முதீன், கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம். சிந்தாஷா, மென்பொருள் நிறுவன இயக்குநர் நஸ்ருல்லாஹ்கானிடமிருந்து கணினிவழி அரபிமொழி பிரதியை பெற்றுக் கொள்கின்றனர். உடன் முனைவர் கே. அப்துஸ் ஸமது, கே.என். அப்துல் காதர் நிஹால் மற்றும் முன்னாள் முதல்வர், துணை முதல்வர், அரபி உயர் கல்வி மற்றும் ஆய்வுத் துறை பேராசிரியர்கள்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

Cable: MONOPOLY POST BOX No. 3748
Majestic Motors
117, GENERAL PATTERS ROAD,
CHENNAI-600 002.
Ph: 28600937 - 28600938

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
சிந்தனைச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி:9940041157,இணையதளம்:www.vadakkukottaiyar.com










## திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில்

# ஆடிட்டர் எம். மொய்தீன் அப்துல் காதருக்கு முனைவர் பட்ட பொதுவாய் மொழி தேர்வு

திருச்சி, ஜூலை 1–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் வணிக மேலாண்மைத் துறையில் 19–6–2013 அன்று சிங்கப்பூர் கன்சல்டன்சி எம். மொய்தீன் அப்துல் காதருக்கு வணிக மேலாண்மை பாடத்திற்கான முனைவர், பட்ட பொதுவாய் மொழி தேர்வு நடைபெற்றது.

இதற்கு ஆய்வு வழிகாட்டியாக கல்லூரியின் முன்னாள் முனைவர் முதல்வர் எம். பேக் முஹம்மது, புறத் தேர்வராக அழகப்பா பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் வி. பாலசந்திரன் ஆகியோர் விளங்கினார்கள்.

எம். மொய்தீன் அப்துல் காதர் ஜமால் முஹம்மது கல்லூரியில் பி.காம். பட்டம் பெற்றவர். பின்னர் பட்டய கணக்கர் தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது சிங்கப்பூரில் டி.என்எச். கன்சல்டன்சியில் ஆடிட்டராக பணிபுரிந்து வருகிறார்.

மேலும், சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கத்தை உருவாக்கி திறம்பட பல்வேறு சமூகப் பணிகளை செய்து வருகிறார். இதுமட்டுமின்றி சிங்கப்பூரில் பல்வேறு கல்வி நிறுவனங்களில் 19 ஆண்டுகளாக ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார். பல்வேறு கல்வி சார்ந்த அமைப்புகளிலும் உறுப்பினராகவும் அங்கம் வகிக்கிறார்.

நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜ்முதீன், பொருளாளர் ஏ.கே. கலீல் அஹ்மது, உதவிச் செயலர் எம்.ஜே. ஜமால் முஹம்மது, கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம். முஹம்மது சிந்தாஷா, துணை முதல்வர் முனைவர் எம். முஹம்மது சாலிஹ், கூடுதல் துணை முதல்வர் ஏ. முஹம்மது இப்ராஹீம், மேலாண்மைத் துணை இயக்குநர் முனைவர் கே. அப்துல் சமது, சுயநிதி பிரிவு இயக்குநர் பேராசிரியர் கே.என். அப்துல் காதர், நிஹால் மேலாண்மைத் துறை தலைவர் முனைவர் ஆர். காதர் மொய்தீன், நிதியாளர் முனைவர் எஸ். இஸ்மாயில் மொய்தீன் மற்றும் கல்லூரி மேலாண்மைத் துறை மற்றும் பல்துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வை சிறப்பாக முடித்தமைக்கு கல்லூரி செயலாளர், தாளாளர் மற்றும் முதல்வர் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# கலாம் பொது நல சங்கம் எட்டம் ஆண்டு துவக்க விழா மற்றும் கல்வி நிதிவழங்கும் விழா






கலாம் பொது நலச் சங்கம் சார்பாக எட்டாம் ஆண்டு துவக்க விழா மற்றும் கல்வி நிதி வழங்கும் விழா 30.06.2013 அன்று நத்தர்ஷா பள்ளிவாசல் அருகில் உள்ள சான் பஜார், திருச்சியில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மரியாதைக்குரிய திருச்சி வருவாய் கோட்டாட்சியர், ஜனாப்.ஏ.பஷீர் அவர்கள் கல்வி உதவித் தொகை மற்றும் பரிசுகளை வழங்கி பேருரையாற்றினார். இவ்விழாவில் **திருச்சி ஜமால் முகமது கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே.காஜா நஜீமுத்தீன் அவர்கள் கல்வி நிதி உதவி அளித்து சிறப்புரையாற்றினார்.** மேலும் ஜமால் முகமது கல்லூரியின் முதல்வர் முனைவர். ஏ. முகமது சிந்தாஷா, ஜனாப் எம்.ஐ.ஹபீபுல்லாஹ், அய்மான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டாக்டர். ஜி. பாலகிருஷ்ணன் இந்திரா கணேசன் பொறியியல் கல்லூரி அவர்கள் மற்றும் அல்ஹாஜ் ஜனாப் ஏ.கே.யூசுப் முதலியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இவ்விழாவிற்கு ஜனாப். ஜே.கே.வஜீர், டி.இம்தியாஸ் அஹமத், ஜனாப். என். அஸ்கர் அலி, ஜனாப் எம். ஜி. சலீம், ஜனாப் எம். சாதிகுல் அமீன் முதலியோர் முன்னிலை வகித்தனர். ஜனாப் என். சையது ஜாகிர், தலைவர், கலாம் பொதுநல சங்கம் அவர்கள் தலைமையுரையாற்றினார். ஹாபிஸ். ஏ. அல்லாபக்ஷ் அவர்கள் கிராஅத் ஓதி நிகழ்ச்சி ஜனாப் கே.கே.மூஸா கோயா அவர்களால் துவக்கப்பட்டது. சங்க செயல்பாடுகளைப் பற்றி கவிஞர் ஏ. முகமது அலி விரிவாக எடுத்துரைத்தார். சங்கத்தின் எதிர்கால நோக்கங்களைப் பற்றி ஜனாப் கே.ஏ.சிராஜுதீன் அவர்கள் எடுத்துரைத்தார்.

முன்னதாக எஸ். சர்தார் ஷேக் பாவாதீன் அவர்கள் வரேவற்புரை நிகழ்த்தினார். இறுதியாக ஜனாப் எஸ்.பி.தஸ்தகீர் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

மறுமையின் விளைநிலம் இம்மை!
இறைஅருளாளர்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com.,BGL.
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம். அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-43 ஹிஜ்ரி 1434 ஷஃபான் - 23 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆனி-18 சென்னை 3-7-2013 புதன் வெளியூர் 4-7-2013 வியாழன்

# கலாம் பொதுநல சங்க 8-ம் ஆண்டு துவக்க விழா

## கோட்டாட்சியர் ஏ.பஷீர் பங்கேற்பு






திருச்சி, ஜுலை 3—

கலாம் பொது நலச் சங்கம் சார்பாக எட்டாம் ஆண்டு துவக்க விழா மற்றும் கல்வி நிதி வழங்கும் விழா 30.06.2013 அன்று நத்தர்ஷா பள்ளிவாசல் அருகில் உள்ள சான் பஜார் திருச்சியில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு திருச்சி வருவாய் கோட்டாட்சியர் ஏ.பஷீர் கல்வி உதவித் தொகை மற்றும் பரிசுகளை வழங்கி பேருரையாற்றினார்.

இவ்விழாவில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜீமுத்தீன், கல்வி நிதி உதவி அளித்து சிறப் புரையாற்றினார். மேலும் ஜமால் முகமது கல்லூரி முதல்வர் முனைவர் ஏ. முகமது சிந்தாஷா, எம்.ஐ.ஹபீபுல்லாஹ் (அய்மான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி), டாக்டர் ஜி. பாலகிருஷ்ணன் (இந்திரா கணேசன் பொறியியல் கல்லூரி) மற்றும் ஏ.கே.யூசுப் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இவ்விழாவிற்கு ஜே.கே. வஜீர், டி.இம்தியாஸ் அஹமத், என். அஸ்கர் அலி, எம். ஜி. சலீம், எம். சாதிகுல் அமீன் முதலியோர் முன்னிலை வகித்தனர்.

கலாம் பொதுநல சங்க தலைவர் என். சையது ஜாகிர் தலைமையுரையாற்றினார்.

ஏ. அல்லாபக்ஷ் கிராஅத் ஓத, நிகழ்ச்சியை கே.கே.மூஸா கோயா துவக்கி வைத்தார்.

சங்க செயல்பாடுகளைப் பற்றி கவிஞர் ஏ. முகமது அலி விரிவாக எடுத்துரைத்தார். சங்கத்தின் எதிர்கால நோக்கங்களைப் பற்றி கே.ஏ. சிராஜுதீன் எடுத்துரைத்தார்.

முன்னதாக எஸ். சர்தமார் ஷேக் பாவாதீன் வரேவற்புரை நிகழ்த்தினார். இறுதியாக எஸ்.பி.தஸ்தகீர் நன்றியுரை யாற்றினார்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2012-2014 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 3-7-2013 (புதன்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ மலர் 36 இதழ் 200

திருச்சி

# ஜமால்முகமது கல்லூரியில் நாளை அராபிக் பட்டமளிப்பு விழா

## அசோசியேஷன் தொடக்க விழா நடக்கிறது

திருச்சி, ஜூலை.3–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நாளை அராபிக் பட்டமளிப்பு விழா மற்றும் அராபிக் அசோசியேஷன் தொடக்க விழா நடைபெறுகிறது.

நாளை காலை 10 மணிக்கு நடைபெறும் விழாவிற்கு ஜமால் முகமது கல்லூரி செயலாளர் ஜனாப் டாக்டர். எ.கே. காஜா நஜீமுதீன் தலைமை வகிக்கிறார். கல்லூரி பொருளாளர் ஹாஜி. கே.ஏ.கலீல் அகமது சாகிப் முன்னிலை வகிக்கிறார். விழாவில் சென்னை பி.எஸ் பல்கலைக் கழக டீன் மவுலானா டாக்டர் சையது மஸ்சுத் ஜமாலி கலந்து கொண்டு ;நவீன உலகில் உலமாக்களின் பங்கு; என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுகிறார். சென்னை நியூ காலேஜ் முதல்வர் டாக்டர். எஸ். அப்துல் மாலிக், வீர சோழன் ஜாமியா கய்ரத்துல் இஸ்லாம் கல்லூரி முதல்வர் அப்துல் காதிர்பகாவி, ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கின்றனர். இஸ்லாமிய கல்லூரி முதல்வர் மவுலானா ஏ.எம். முகமது சிந்தஷா, உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2012-2014 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

திருச்சி 6-7-2013 (சனிக்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ மலர் 36 இதழ் 203

## திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

# ஆலிம் ஜமாலி திருச்சி பட்டமளிப்பு விழா

திருச்சி, ஜூலை. 6–

திருச்சியில் அமைந்துள்ள ஜமால் முகமது கல்லூரியில் அரபு உயர்க்கல்வி மற்றும் ஆராய்ச்சி துறையில் இளங் கலை, முதுகலை பட்டப்படிப் புடன் ஒருங்கிணைந்த இஸ் லாமிய மார்க்க கல்வியை ஐந்தாண்டுகள் படித்து இறுதி தேர்வில் தேர்ச்சி அடைந்த மாணவர்களுக்கு "ஆலிம் ஜமாலி திருச்சி" என்று அழைக் கப்படும் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழகத் தின் மிக மூத்த இஸ்லாமிய பேரறிஞர் ஹைரியத்துல் இஸ்லாம் அரபிக் கல்லூரி, வீரசோழன் முதல்வருமான மௌலானா ஓ.எம்.அப்துல் காதர் பாகவி பட்டமளிப்பு பேருரையாற்றி தேர்ச்சிய டைந்த எழுவருக்கும் ஸனது களை வழங்கினார்.

அவர் தமது உரையில் "இஸ்லாமிய மார்க்கம் என் றால் வெறும் மத சடங்கு களோ, அல்லது வழிபாட்டு மந்திரங்களோ கற்றுக்கொள் வது மட்டுமல்ல, மாறாக மனிதனின் வாழ்க்கையில் நெறிப்படுத்தும் ஓர் வழி முறையாகும். இறைக்கல்வி என்பது எதுவெல்லாம் மனித னுக்கு பயன்படுமோ அவை அனைத்துமே இன்னும் கூறின் உலக கல்விகளின் அனைத்து துறைகளும் குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது. இஸ்லாமிய மார்க்கத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமென்றால் உலக கல்வியையும் கற்றுக் கொள்வது அவசியமாக உள் ளது" என்று குறிப்பிட்டார்.

கல்லூரியின் செயலர் மற் றும் தாளாளருமான டாக்டர். ஏ.கே.காஜாநஜீமுதீன் விழா வினை வழிநடத்தி வாழ்த் தினார். கல்லூரியின் முதல் வர் ஏ.எம்.முகமது சிந்தாஷா தலைமை உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் முனைவர் சையத் மஸ்ஊத் ரஹ்மான் பல்கலைக்கழகம், சென்னை "நவீன சமுதாயத்தில் இஸ் லாமிய மார்க்க அறிஞர் களின் பங்கு" என்ற தலைப் பில் சிறப்புரையாற்றினார்.

முனைவ சென்னை புதுக் கல்லூரி முதல்வர் எஸ். அப்துல் மாலிக், இக்ர பிஸ்மி ரப்பிக் அரபிக் அமைப்பின் நடப்பு கல்வியாண்டிற்கான செயல்பாடுகளை துவக்கி வைத்து உரையாற்றினார். முன்னதாக அரபுத் துறையின் தலைவர் முனைவர் எஸ். சையத்கியாஸ் அகமது வர வேற்புரை நிகழ்த்தினார்.




விழாவில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்களுடன் கல்லூரி செயலாளரும், தாளாள ருமான டாக்டர் ஏ.கே.காஜா நஜிமுதீன் மற்றும் முதல்வர் ஏ.எம்.முகமது சிந்தாஷா.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN/PMG(CCR)WPP258/2013-15

Phone: 25588855 / 42817251 / 26736607
Cell: 94444 63800 / 9042630299
KHAN CHICKENS
1024, 15th Street, M.K.B. Nagar,
Chennai - 600 039
www.khanchickens.com

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

யாதும் ஊரே! யாவரும் கேளீர்!
சிந்தனைச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ் வ.மு.செய்யது அகமது
அறங்காவலர் வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை

மணி-27 சுடர்-50 ஹிஜ்ரி 1434 ஷஃபான் - 30 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆனி-26 சென்னை 10-7-2013 புதன் வெளியீடு 11-7-2013 வியாழன்



## பாரதிதாசன் பல்கலை பேரவை தேர்தலில்

# ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் துறை தலைவர் ஜமால் முகமது ஜாபர் வெற்றி

திருச்சி ஜூலை 10–

பாரதிதாசன் பல்கலை பேரவை குழுக்கான தேர்தல் நடந்தது. இதில் தமிழ்நாடு அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தின் (ஆக்டா) திருச்சி மண்டலத்தைச் சேர்ந்த ஐந்து பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

ஜோசப் கல்லூரி தாவரவியல் துறை பேராசிரியர் ஜான், புத்தனாம்பட்டி நேரு நினைவு கல்லூரி வணிகவியல் துறை தலைவர் செல்வராஜ், தேசிய கல்லூரி கணிதத்துறை பேராசிரியர் முத்துக்கிருஷ்ணன், ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் துறை தலைவர் ஜமால் முகமது ஜாபர், பிஷப் ஹீபர் கல்லூரி சுற்றுசூழல் துறை பேராசிரியர் ரவிச்சந்திரன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இதில், பேராசிரியர் முத்துக்கிருஷ்ணன் வெற்றி பெற்றதால், ஆட்சி மன்ற குழு உறுப்பினர் பதவியில் நீடிக் கின்றார். வெற்றி பெற்றவர் களை சங்க பொதுச் செயலாளர் சோமசுந்தரம் பாராட்டினார்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

கிப்ஸ்
KIBS
HANDLOOM TEXTILES
லுங்கிகள் பனியன்கள்
ஈட்டிகள் கைக்குட்டைகள்
தயாரிப்பாளர்கள்
முகமது இதிரிஸ் பிரதர்ஸ் (பி) லிட்.
5, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை - 600 001
Phone : 25221371 25221372 25221373

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ-கா-அ- அப்துஸ் ஸமது

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!
சிந்தனைச் சிற்பி
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யதுஅகமது B.Com.B.L.
அறங்காவலர்:வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-64 ஹிஜ்ரி 1434 ரமலான் - 4 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆனி-30 சென்னை 14-7-2013 ஞாயிறு வெளியீடு 15-7-2013 திங்கள்





திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் கைவிட் டோர் கழகத்தின் புதிய நிர்வாகிகளுக்கு கல்லூரி தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜ்முத்தீன் அகில இந்திய வானொலி பண்பலை அலுவலர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் பதவி பிரமாணம் செய்து வைத்தனர்.

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு

## கல்லூரி செயலாளர் முனைவர் ஏ.கே.நஜ்முத்தீன் வானொலி அலுவலர் வெங்கடேஸ்வரன் பங்கேற்பு

திருச்சி ஜூலை, 14–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் 29–வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா நடைபெற்றது.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி வளாகத்தில் உள்ள காஜாமியான் விடுதி கலையரங்கத்தில் கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் 29–வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா நடைபெற்றது. பதவி ஏற்பு விழாவை அரபித்துறை மாணவர் ஹாபிஸ் அப்துல் காதர் கிராஅத் ஓதி தொடங்கி வைத்தார் .

விழாவுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம். முஹம்மது ஜிந்தாஷா தலைமை வகித்து புதிய நிர்வாகிகள் எப்படியெல்லாம் சமூக சேவைகள் செய்ய வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் பேராசிரியர் முஹம்மது கரீம் வரவேற்று பேசினார். கழகத்தின் உறுதி மொழியை கழகச் செயலாளர் ஷேக் தாவூத் வாசிக்க அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று உறுதி மொழியை எடுத்தனர். ஆண்டு அறிக்கையை முன்னாள் செயலாளர் ஹாஜா மைதீன் வாசித்தார்.

கைவிட்டோர் கழகத்தின் புதிய நிர்வாகிகளை திருச்சி அகில இந்திய வானொலி பண்பலை அலுவலர் வெங்கடேஸ்வரன், கல்லூரி செயலாளர் முனைவர் ஏ.கே. நஜ்முத்தீன் ஆகியோர் பதவி ஏற்று வைத்தனர். கைவிட்டோர் கழகத்தின்

புதிய தலைவராக அஹமது அப்துல்லா சாதிக்,செயலாளராக ஷேக் தாவூத் ,பொருளாளராக எஸ்.சாதிக், உதவும் இதயங்கள் செயலாளராக இமாம் முஹம்மது ஷரிபு ஆகியோர் புதிய நிர்வாகிகளாக பதவி ஏற்றனர்.

கழகத்தின் முன்னாள் தலைவர் அய்யூப் ஜாவித் புதிய தலைவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.மற்ற நிர்வாகிகள் மற்றும் பல்வேறு சமூக அமைப்பு உறுப்பினர்கள் முறையாக தங்களது பொறுப் பினை ஏற்றுக்கொண்டனர் .

விழாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு–

மன்னார்புரம் பார்வையற்றோர் பள்ளிக்கு டி.வி.டி. பிளையர் வழங்கப்பட்டது .

திருச்சி பி. சேவா சங்கத்திற்கு புத்தகங்கள் வழங்கப்பட்டது.

விடுதி வளாகத்தில் மாணவர்கள் பயன் பெறும் வகையில் ஹதீஸ் போர்டு உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கைவிட்டோர் கழகத்தின் நிறுவனர் என்.ஏ.எம்.அப்துல் சலீம் புதிய நிர்வாகிகளுக்கு பல்வேறு சேவைகள் எப்படி செய்ய வேண்டும் என்பதை அறிவுரை வழங்கினார்.

கைவிட்டோர் கழகத்தின் ஆலோசகர் பேராசிரியர் முஹம்மது இஸ்மாயில் நன்றி கூறினார்.

விழாவில் கல்லூரி பேராசிரியர்கள் விடுதி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர் .இந்த கைவிட்டோர் கழகத்தில் 600 மேற்பட்டோர் புதிய நிர்வாகிகளாக பதவி ஏற்றுக் கொண்டனர் .

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

கிப்ஸ்
KIBS
லுங்கிகள் பனியன்கள்
ஜட்டிகள் கைக்குட்டைகள்
HANDLOOM TEXTILES
தயாரிப்பாளர்
முகமது இதிரிஸ் பிரதர்ஸ் (பி) லிட்.
5, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை - 600 001
Phone : 25221371 25221372 25221373

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!
சிந்தனைச் சிற்பி
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யதுஅகமது B.Com.BL.
அறங்காவலர்:வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-64 ஹிஜ்ரி 1434 ரமளான் - 4 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆனி-30 சென்னை 14-7-2013 ஞாயிறு வெளியீடு 15-7-2013 திங்கள்






திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் கைவிட் டோர் கழகத்தின் புதிய நிர்வாகிகளுக்கு கல்லூரி தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜ்முத்தீன் அகில இந்திய வானொலி பண்பலை அலுவலர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் பதவி பிரமாணம் செய்து வைத்தனர்.

# திருச்சி ஜமால் முஹம்மது மகளிர் கல்லூரியில் கைவிட்டோர் கழக புதிய நிர்வாகிகள்

திருச்சி ஜூலை 14–

திருச்சி ஜமால் முஹம்மது மகளிர் கல்லூரியில் கைவிட் டோர் கழகத்தின் புதிய நிர்வாகி கள் பதவி ஏற்றனர்.

திருச்சி ஜமால் முஹம்மது மகளிர் கல்லூரி விடுதியில் கைவிட்டோர் கழகத்தின் புதிய நிர்வாகிகள் நியமனம் செய்யப் பட்டனர். புதிய தலைவராக பஷிதா பேகம் ,செயலாளராக பெமினா பேகம் ஆகியோருக்கு பதவிப் பிரமாணம் செய்யப்பட் டது.

இந்த விழாவுக்கு கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் முனைவர் ஏ.கே.நஜ்முத்தீன் தலைமை வகித்தார். கைவிட் டோர் கழகத்தின் ஆலோசகர் பேராசிரியர் கௌதர் வரவேற்று பேசினார்.

விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது ஜிந் தாஷா, அகில இந்திய வானொலி சீனியர் அலுவலர் சித்ரா வேலன்டைனா திருவா ளன் துணை முதல்வரும் மகளிர் விடுதி காப்பாளருமான முனை வர் எஸ்.முஹம்மது சாலிஹ் கூடுதல் துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ரா ஹிம் கைவிட்டோர் கழகத்தின் நிறுவனர் என்.ஏ.எம்.அப்துல் சலீம் மற்றும் பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்ட னர்.

கைவிட்டோர் கழகத்தின் செயலாளர் பெமினா பேகம் நன்றி கூறினார்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

பூட்டு மார்க்
• கைலிகள்
• பனியன்கள்
• ஜட்டிகள்
K.A.S. ஜெய்னுலாப்தீன் & கோ

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

மறுமையின் விளைநிலம் இம்மை!
இறைஅருளாளர்
வடக்குக்கோட்டையார்
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை

சென்னை 21-7-2013 ஞாயிறு வெளியீடு 22-7-2013 திங்கள்






# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க சிங்கப்பூர் கிளை நடத்திய இஃப்தார்

## சமய நல்லிணக்க நிகழ்வாக நடைபெற்றது

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 20–07–2013 அன்று பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு மற்றும் சமய இன நல்லிணக்க நிகழ்ச்சியை நடத்தியது.

சிங்கப்பூரின் ஒற்றுமை, சமய மற்றும் இன நல்லிணக்கத்தைப் பறைசாற்றிய இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இரா. தினகரன் கலந்து கொண்டார். இச்சங்கத்தின் கல்விப் பணிகளைப் பாராட்டி பேசியதுடன், சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு சமூகத் தொண்டும், சமய இன நல்லிணக்கமும், ஒற்றுமையும் மிகவும் அவசியம் என்றார். சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஆற்றி வரும் கல்வி சார்ந்த சமுதாயப்பணி மிகவும் பாராட்டுக்குரியது என்றார்.

வரவேற்புரை வழங்கிய சங்கத்தின் தலைவர் முனைவர் ஆடிட்டர் ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர், சங்கத்தின் எதிர்கால திட்டங்களை எடுத்துரைத்தார். சங்கத்தின் செயலாளர் அப்துல் சுபஹான் நிகழ்ச்சியை வழிநடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் சிங்கப்பூர் கலைப்பித்தர்கள் கழகத்தின் தலைவர் வழக்கறிஞர் கலா மோகன், சிங்கப்பூர் இந்திய வர்த்தக தொழில் சபையின் தலைவர் நாரயணமோகன், தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் ஹரிகிருஷ்ணன், வளர்தமிழ் இயக்கத்தின் தலைவர் ராஜாராம், சிண்டாவின் பிரதிநிதி சோமசுந்தரம், ஜாமியா சிங்கப்பூர் அமைப்பின் தலைவர் டாக்டர் முஹம்மது ஹஸ்பி அபூபக்கர், துணைத் தலைவர் டாக்டர் ஹெச். எம். சலீம்,

இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் பரி ஹுல்லா, சிங்கப்பூர் நாணய மாற்று வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜஹாங்கீர், தோப்புத் துறை முஸ்லிம் சங்கத் தலைவர் டாக்டர் கே. எம். தீன், தமிழ் பட்டிமன்ற கழகத் தலைவர் யூசுப் ரஜித், முஸ்தபா தமிழ் அறக் கட்டளையின் அறங்காவலர் முஸ்தபா, காயல்பட்டின நல மன்ற மதியுரைஞர் முஹம்மது ஹசன், கீழக்கரை சங்கத்தின் செயலாளர் நிஜாமுதீன், சிங்கப்பூர் நாகூர் சங்கத்தின் செயலாளர் முஹம்மது கௌஸ்,

தமிழ் முரசு இணை ஆசிரியர் அழகியபாண்டியன், எழுத்தா ளர் ஜே.எம். சாலி, எழுத்தாளர் டாக்டர் ஹிமானா சையது, கவிமாலை காப்பாளர் மா. அன்பழகன், செம்மொழி ஆசிரியர் இல்யாஸ், பென்கூலன் பள்ளிவாசலின் துணைத் தலைவர் முஹம்மது ரபீக், பி. எஸ். அப்துர்ரஹ்மான் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் சையது யூசூப் மற்றும் பல சமூகத் தலைவர்களும், பிரமுகர்களும், சங்க உறுப் பினர்களும் கலந்து கொண் டனர். ஒற்றுமையையும், சமய இன நல்லிணக்கத்தையும் பறைசாற்றிய வண்ணம், இந் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.





சிங்கப்பூரில் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் நடத்திய நோன்பு திறப்பு இஃப்தார் நிகழ்ச்சி காட்சிகள்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

Cable: MONOPOLY POST BOX No. 3748
Majestic Motors
117, GENERAL PATTERS ROAD,
CHENNAI-600 002.
Ph: 28600937 - 28600938

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!
சிந்தனைச் சிற்பி
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadaidukottaiyar.com

மணி-27 சுடர்-63 ஹிஜ்ரி 1434 ரமலான் - 13 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆடி-7 சென்னை 23-7-2013 செவ்வாய் வெளியீடு 24-7-2013 புதன்

# துபையில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க இஃப்தார்

## எம்.அப்துல் ரஹ்மான் எம்.பி. பங்கேற்பு

துபை, ஜூலை 23–

துபையில் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு மற் றும் இஃப்தார் நிகழ்ச்சி நாஸர் ஸ்கொயர் லேண்ட்மார்க் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் துவக்க மாக இறைவசனங்கள் ஓதப் பட்டது. திண்டுக்கல் ஜமால் முஹ்யித்தீன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க தலைவர்,லேன்ட் மார்க் குரூப் நிர்வாக இயக்குனர் சாதிக் தலைமை தாங்கினார். அவர் தனது தலைமையுரையில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதில் ஆர்வமுடன் கலந்து கொள்ளும் முன்னாள் மாணவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த முன் னாள் மாணவர் சங்கம் மேலும் வளர என்னால் இயன்ற உதவிகளைச் செய்கிறேன் என்றார். இந்த நிகழ்ச்சி இன்னும் சிறப்பாக வரும் காலங்களில் "Duabi World Trade Center" இல் நடைபெற வேண்டும் என்ற தனது ஆசையை பகிர்ந்து கொண்டார். மேலும் சோனாப் பூர் லேபர் கேம்ப்களுக்கு சென்று, அவர்களுக்குண்டான சேவைகளை செய்திட வேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார்.

### சமுதாயப் புரவலர்கள் வாழ்த்துரை

ஈடிஏ பிபிடி எக்ஸிகியூடிவ் டைரக்டர் அன்வர் பாஷா, ஈடிஏ ஹெச்.ஆர்.எம் எக்ஸிகியூடிவ் டைரக்டர் அக்பர் கான், பேராசி ரியர் கலந்தர் மொகைதீன், ஈமான் அமைப்பின் பொதுச்

(4-ம் பக்கம் பார்க்க)

# துபையில் ஜமால் முஹம்மது கல்லூரி....

## (முதல் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரும், அமீரக காயிதே மில்லத் பேரவை தலைவருமான குத்தாலம் லியாகத் அலி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அறக்கட்டளை அறங்காவலரும், ஆலியா குரூப் நிர்வாக இயக்குனருமான ஷேக் தாவூத், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் புரவலர் கீழக்கரை உசேன் காகா, அமீரக காயிதே மில்லத் பேரவையின் பொதுச்செயலாளர் திருபனந்தாள் தாஹா ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து முகமது ரஹ்மதுல்லா, முன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பில் கல்வி உதவித்தொகை வழங்கி வரும் நன்கொடையாளர்கள் குறித்த விபரங்களைத் தெரிவித்தார். மேலும் கடந்த ஒரு வருடத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

### எம்.அப்துல் ரஹ்மான் எம்.பி. சிறப்புரை

காயிதே மில்லத் பேரவை சர்வதேச ஒருங்கிணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம். அப்துல் ரஹ்மான், ஜமால் முஹம்மது கல்லூரி சமூக நல்லிணக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டார். முன்னாள் மாணவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆற்றி வரும் அளப்பெரும் பணிகளை நினைவு கூர்ந்தார். வருடந்தோறும் கூடி கல்லூரியின் பழைய நினைவுகளை பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

முன்னாள் மாணவர்கள் தங்களது பழைய நினைவுகளை பகிர்ந்து கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், அமீரக முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கான நல்ல பல ஆலோசனைகளை வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மேலும் கல்லூரியில் பயிலக்கூடிய ஏழை, எளிய மாணவர்களுக்கு அமீரக முன்னாள் மாணவர்கள் வழங்கி வரும் உதவித்தொகை அவர்களது வாழ்வின் உயர்வுக்கு முக்கியமானது. இதுபோல் இன்னும் பல்வேறு பணிகளை மேற்கொள்ள வாழ்த்தினார். கூடுதலாக, அமீரகத்தில் பணிபுரியும் சகோதரர்கள் சரியாக திட்டமிட்டு, சேமிப்பு உணர்வை வளர்த்து செயல்பட வேண்டுமென்றும், நமது இந்திய திருநாட்டில் இருக்கும் பலதரப்பட்ட முதலீட்டு வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

லெப்பைக்குடிக்காடு நியமத்துல்லாஹ், திருவிடச்சேரி எஸ்.எம். ஃபாரூக், திண்டுக்கல் ஜமால் முஹ்யித்தீன் மற்றும் பலர் தங்களது கல்லூரிக் கால நினைவுகளையும், கல்லூரி தங்களது வாழ்வின் வளர்ச்சிக்கு எவ்வாறெல்லாம் இருந்துள்ளது எனபதனையும் நினைவு கூர்ந்தனர்.

### நினைவுப் பரிசுகள்

தமிழ்நாடு வக்பு வாரியத்தின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள எம்.அப்துல் ரஹ்மான் எம்.பி—க்கு கடையநல்லூர் முஸ்லிம் ஜமாஅத் சார்பில் அமீரக காயிதே மில்லத் பேரவை கொள்கைபரப்பு செயலாளர் எஸ்.கே.எம்.ஹபிபுல் லாஹ் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

முன்னாள் மாணவர் சங்கம் சிறந்து விளங்க அனைத்து உதவிகளையும் செய்துவரும் ஈடிஏ ஹெச்.ஆர்.எம் எக்ஸிகியூடிவ் டைரக்டர் அக்பர் கான் மற்றும் சூப்பர் சோனிக் ஜியாவுதீன் ஆகியோருக்கான நினைவு பரிசுகளை முறையே வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம். அப்துல் ரஹ்மான், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க தலைவர், லேண்ட் மார்க் குரூப் நிர்வாக இயக்குனர் சாதிக் ஆகியோர் வழங்கி கவுரவித்தனர்.

அஞ்சுகோட்டை அப்துல் ரசாக் நன்றியுரை நிகழ்த்தினார். அமீரக காயிதே மில்லத் பேரவை பொருளாளர் கீழக்கரை எஸ்.கே.எஸ்.ஹமீது ரஹ்மான் நிகழ்வினை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஜாபர் சித்திக் தலைமையிலான ஹாஜா, இஸ்ஹாக், செய்யது இபுராஹிம், ஜமால் மைதீன், எஸ்.கே.எஸ், ஹமீது ரஹ்மான் உள்ளிட்ட நிர்வாகக் குழுவினர் சிறப்பான முறையில் செய்திருந்தனர். அமீரகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் முன்னாள் மாணவர்கள் மற்றும் துபாய் ஈமான் அமைப்பின் நிர்வாகிகளும், காயிதே மில்லத் பேரவை நிர்வாகிகளும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

**செய்தி : ஜமிலா மைந்தன்**

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

பூட்டு மார்க்
• கைலிகள்
• பனியன்கள்
• ஜட்டிகள்
தயாரிப்பாளர்கள் :
K.A.S. ஜெய்னுல்ஆப்தீன் & கோ

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!
தமிழ் மாமணி
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ் வ.மு.செய்யது அகமது B.Com,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 94400 40157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-69 ஹிஜ்ரி 1434 ரமளான் - 19 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆடி-13 சென்னை 29-7-2013 திங்கள் வெளியீடு 30-7-2013 செவ்வாய்

## கல்லூரிகளுக்கிடையிலான செஸ் போட்டியில்

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர் அஜ்மல் சாதனை

## திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி மாணவர் குணால் முதல் இடம்

திருச்சி ஜூலை.29–

எட்டு மாவட்ட கல்லூரிகளுக்கு இடையிலான செஸ் போட்டியில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி மாணவர் குணால் முதலிடம் பிடித் தார். 7 சுற்றுகள் விளையாடி அனைத்திலும் வென்று சாதனை படைத்தார்.

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் 8 மாவட்ட கல்லூரிகளுக்கு இடையிலான செஸ் போட்டி இரண்டு நாட்கள் நடந்தது. இப்போட்டியில் திருச்சி, தஞ்சை, பெரம்பலூர், அரியலூர், கரூர், புதுகை, திருவாரூர் மற்றும் நாகை ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள 33 கல்லூரிகளை சேர்ந்த 22 மாணவிகள் உட்பட 62 பேர் பங்கேற்றனர். மொத்தம் 7 சுற்றுகளாக போட்டிகள் நடைபெற்றன.

7 சுற்றுகள் முடிவில் அனைத்து சுற்றிலும் வென்று திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி மாணவர் குணால் முதலிடம் பிடித்தார்.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி வீரர் அஜ்மல், மயிலாடுதுறை ஏவிசி கல்லூரி விஜயகுமார், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கலைக்கல்லூரி ஜெயபிரகாஷ் ஆகியோர் 5.5 புள்ளிகளுடன் அதற்கு அடுத்த இடங்களை பிடித்தனர். 5ம் இடத்தை அசனும் (புதுகை மன்னர் கல்லூரி), 6ம் இடத்தை அருள் (தேசியக் கல்லூரி) ஆகியோர் பிடித்தனர்.

போட்டிகளில் முதல் ஆறு இடத்தை பிடித்த மாணவர்கள் அனைவரும் தென் மண்டல அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான செஸ் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பிஷப் ஹீபர் கல்லூரி முதல்வர் பால் தயாபரன் பரிசுகளை வழங்கினார். மாணவர் போட்டி ஒருங்கிணைப்பாளர் ஜான் உட்பட பல்வேறு கல்லூரி உடற்கல்வி இயக்குநர்கள் பங்கேற்றனர்.

உலகத் தமிழ் பல்கலைக்கழகம் (அமெரிக்கா) மதிப்புறு முனைவர் பட்டம் அளிக்கும் விழாவில்

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் முனைவர்.ஏ.கே.காஜா நஜீமுத்தீன் அவர்கள் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி சிறப்புரை









உலகத் தமிழ் பல்கலைக்கழகம் (அமெரிக்கா) மதிப்புறு முனைவர் பட்டம் அளிக்கும் விழா மதுரை மாநகரம் ஹோட்டல் சுப்ரீம் கலையரங்கத்தில் 27.07.2013 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் **திருச்சி ஜமால் முகமது கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் முனைவர்.ஏ.கே.காஜா நஜீமுத்தீன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பட்டங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.** இவ்விழாவில் எம். தேசிங்கு ராஜன், ஆர்.லட்சுமணன், டி.ஆர்.கே.சரஸ்வதி, என்.ஆர்.விர்ஜின்இனிகோ மற்றும் எஸ்.பூமிநாதன் முதலிய 5 நபர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. மேலும் இவ்விழாவில் வேந்தர்.முனைவர்.செல்வின் குமார் அவர்கள் கலந்து கொண்டார்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

LOCK BRAND
பூட்டு மார்க்
• கைலிகள்
• பனியன்கள்
• ஜட்டிகள்
தயாரிப்பாளர்கள் :
K.A.S. ஜெய்னுல்ஆப்தீன் & கோ
KAS
P: 91 44 25260483, Web: www.kasz.in

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

ஜாதியை விடு! நீதியை தொடு!
சமுதாயப்புரவலர்
வடக்குக்கோட்டையார்
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரியதெரு, கூத்தாநல்லூர்-614101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-73 ஹிஜ்ரி 1434 ரமளான் - 23 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆடி-17 சென்னை 2-8-2013 வெள்ளி வெளியீடு 3-8-2013 சனி



# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் இஃப்தார்

## முனைவர் ராம் கணேஷ், டாக்டர் அலீம் பங்கேற்பு

திருச்சி, ஆகஸ்ட்:01–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் ரமளான் நோன்பு திறப்பு இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி வருடம்தோறும் ரமளான் இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்த வருடம் ரமளான் இஃப்தார் நிகழ்ச்சி கல்லூரி விடுதி வளாகத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் முனைவர் ஏ.கே. நஜ்முத்தீன் தலைமை வகித்தார் கல்லூரி முதல்வர் முனைவர் முகம்மது ஜிந்தாஷா அனைவரையும் வரவேற்று பேசினார்.

ரமலான் மாதத்தைப் பற்றிய சிறப்புகள் குறித்து கல்லூரியின் முன்னாள் துணை முதல்வர் டாக்டர் கமாலுதீன் சிறப்புரையாற்றினார். இந்த இஃப்தார் நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) முனைவர் ராம் கணேஷ், திருச்சி கி.ஆ.பெ.மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் டாக்டர்அலீம் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

இந்த விழாவில் கல்லூரி விடுதி மாணவர்கள் சுமார் 2500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மேலும் முன்னாள் மாணவர்கள் வியா பாரிகள் தொழில் அதிபர்கள் திரளாக இந்த இஃப்தார் விருந்தில் கலந்து கொண்டனர்.

விழாவில் கல்லூரி தலைவர் ஹாஜி நூர்தீன் சாஹிபு, பொருளாளர் ஹாஜி மு.யு. கலீல் அஹமது கல்லூரியின் முன்னாள் செயலர் மற்றும் தாளாளர் ஹாஜி அப்துல் கபூர், கல்லூரி துணைச் செயலாளர் ஜமால் முஹம்மது, கல்லூரியின் மேனேஜ்மெண்ட் இயக்குநனர் முனைவர் அப்துல் காதர் கல்லூரி துணை முதல்வர்கள் முனைவர் முஹம்மது சாலிஹ், முனைவர் ஏ. முகம்மது இப்ராஹிம், கல்லூரி முனைவர் ஷேக் முஹம்மது,

கல்லூரி நிதியாளர் மற்றும் கணிதத்துறை தலைவருமான முனைவர் எஸ்.இஸ்மாயில் மைதீன், திருச்சி ஏ.கே.அஹமது பிரதர்ஸ் ஜவுளிக்கடை உரிமையாளர் ஹாஜி உசேன், கல்லூரி விடுதி இயக்குனர் முனைவர் பி.என்.பி. ஷர்புதீன், முனைவர் கலீல் ரஹ்மான், ஏ. முஹம்மது இஸ்மாயில், முனைவர்சையது அலி, பாதுஷா, கே. முஹம்மது இஸ்மாயில் மற்றும் அனைத்து துறை தலைவர்கள் பேராசிரி யர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

Cable: MONOPOLY POST BOX No. 3748
**Majestic Motors**
117, GENERAL PATTERS ROAD,
CHENNAI - 600 002
Ph: 28600937 - 28600938

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!
தமிழ் மாமணி
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம். அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-78 ஹிஜ்ரி 1434 ரமளான் - 28 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆடி-22 சென்னை 7-8-2013 புதன் வெளியீடு 8-8-2013 வியாழன்









# உலகத் தமிழ் பல்கலைக்கழக மதிப்புறு முனைவர் பட்டமளிப்பு

## ஜமால் முகமது கல்லூரி தாளாளர்ஏ.கே.காஜா நஜீமுத்தீன் உரை

உலகத் தமிழ் பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் அளிக்கும் விழா மதுரை மாநகரம் ஹோட்டல் சுப்ரீம் கலையரங்கத்தில் 27.07.2013 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர். ஏ.கே.காஜா நஜீமுத்தீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பட்டங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார். இவ்விழாவில் எம். தேசிங்கு ராஜன், ஆர்.லட்சுமணன், டி.ஆர்.கே.சரஸ்வதி, என்.ஆர்.விர்ஜின்இனிகோ மற்றும் எஸ்.பூமிநாதன் முதலிய 5 நபர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கு வேந்தர், முனைவர், செல்வின் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CN/ GPO/006/2013-2015/TN/PMG(CCR)WPP258/2013-15

கிப்ஸ்
KIBS
லுங்கிகள் பனியன்கள்
ஜட்டிகள் கைக்குட்டைகள்
தயாரிப்பு விநியோகிப்பவர்கள்
முகமது இதிரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.
5, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை - 600 001
Phone : 25221371 25221372 25221373

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

மனிதன் இறப்பை நோக்கி நடக்கிறான்!
சமுதாயச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ் வ.மு. செய்யது அகமது
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96, பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம். அலைபேசி: 9940041137, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-83 ஹிஜ்ரி 1434 ... - 6 பக்கம் 4 ... ரூ. 3 ... சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆடி-29 சென்னை 14-8-2013 புதன் வெளியீடு 15-8-2013 வியாழன்




திருச்சியில் நடந்த துபை ஈமான் சங்க கல்வி உதவித் தொகை வழங்கும் விழாவில் பொதுச் செயலாளர் குத்தாலம் ஏ.லியாக்கத் அலி, கல்லூரியில் பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு வழங்கினார். அருகில் துபை ஈமான் சங்க துணைப் பொதுச்செயலாளர் திருப்பனந்தாள் முகம்மது தாஹா, ஜமால் முகம்மது கல்லூரி செயலாளர் ஏ.கே. காஜா நஜ்முத்தீன், மதுக்கூர் ஹிதாயத்துல்லா உள்ளிட்டோர்.



திருச்சியில் நடந்த துபை ஈமான் சங்க கல்வி உதவித் தொகை வழங்கும் விழாவில் பங்கேற்றவர்கள்.

# துபை ஈமான் சங்க கல்வி உதவித் தொகை: குத்தாலம் ஏ.லியாக்கத்அலி வழங்கினார்

திருச்சி, ஆக. 14–

துபை இந்தியன் (ஈமான்) முஸ்லிம் அசோஷியேசன் சார்பில் கல்வி உதவித் தொகை வழங்கும் விழா திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி வளாகத்தில் 13–8–2013 அன்று துபை ஈமான் சங்கப் பொதுச் செயலாளர் குத்தாலம் ஏ.லியாக்கத் அலி தலைமையில் நடந்தது.

ஜமால் முகம்மது கிராஅத் ஓதினார். துபை ஈமான் சங்க துணைப் பொதுச் செயலாளர் திருப்பனந்தாள் முஹம்மது தாஹா வரவேற்றார்.

ஜமால் முகம்மது கல்லூரி செயலாளர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், கல்லூரி முதல்வர் முகம்மது ஜிந்தஷா, முன்னாள் முதல்வர்கள் காதர் மொகிதீன், சேக் ஷாப், அரபி பேராசிரியர் இஸ்மாயில் ஹஸனி, அய்மான் கல்லூரி செயலாளர் பேராசிரியர் எம்.எம்.எஸ்.சாகுல் ஹமீது ஆகியோர் கல்வி அவசியம் பற்றி விரிவாகப் பேசினார்கள்.

துபை ஈமான் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகையை பொதுச் செயலாளர் குத்தாலம் ஏ.லியாக்கத்அலி, கல்லூரியில் பயிலும் மாணவ–மாணவிகளுக்கு வழங்கினார்.

விழாவில் பேராசிரியர்கள் ஏம்பல் தஜம்மல் அஹமது, முகம்மது சம்சுதீன், துபை ஈமான் கல்வி கமிட்டி நிர்வாகிகள் வேலூர் அக்பர் பாஷா, பைஜுர் ரஹ்மான், ஜாபர் சித்திக், திரிகூடபுரம் முஸ்தபா, மணிச்சுடர் நிருபர் புளியங்குடி சாகுல் ஹமீது உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

முடிவில் கல்வி கமிட்டிச் செயலாளர் மதுக்கூர் ஹிதாயத்துல்லா நன்றி கூற, நெல்லிக்குப்பம் நாருல்லா ஆலிம் துஆ ஓதினார்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN PMG(CCR)WPP258/2013-15

KIBS கிப்ஸ்
ஜங்கிகள் பனியன்கள்
ஜட்டிகள் கைக்குட்டைகள்
தயாரிப்பு விற்பனையாளர்கள்
முகமது இதிரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.,
5, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை - 600 001
Phone: 25221371 25221372 25221373

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

மனிதன் இறப்பை நோக்கி நடக்கிறான்!
சமுதாயச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ் வ.மு. செய்யது அகமது B.Com.,B.L.
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
www.vadakkukottaiyar.com



திருச்சி மாவட்ட கூடைப்பந்து கழகம் நடத்திய கல்லூரிகளுக்கு இடையேயான கூடைப்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் 66–64 என்ற புள்ளிக் கணக்கில் பாவேந்தர் பாரதிதாசன் பொறியியல் கல்லூரியை வென்று சாம்பியன் பட்டம் வென்ற ஜமால் முகமது கல்லூரி கூடைப்பந்து அணி வீரர்களுடன் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜீமுத்தீன் சாஹிப், பொருளாளர் ஹாஜி. கே.ஏ.கலீல் அகமது சாஹிப், முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா, மேலாண்மை துறை இயக்குநர் முனைவர் கே.அப்துஸ் சமது, சுயநிதி பிரிவு இயக்குநர் பேரா.கே.என்.அப்துல் காதர் நிஹால் மற்றும் உடற் கல்வி இயக்குநர் பி.எஸ்.ஷாயின்ஷா ஆகியோர் உள்ளனர்.



கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் நடைபெற்ற மாநில வாலிபால் போட்டியில் 25–19, 25–16 என்ற புள்ளிக் கணக்கில் சேலம் மாவட்டம் அணியை வென்று சாம்பியன் பட்டம் வென்ற ஜமால் முகமது கல்லூரி வாலிபால் அணி வீரர்களுடன் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜீமுத்தீன் சாஹிப், பொருளாளர் ஹாஜி. கே.ஏ.கலீல் அகமது சாஹிப், முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா, மேலாண்மை துறை இயக்குநர் முனைவர் கே.அப்துஸ் சமது, சுயநிதி பிரிவு இயக்குநர் பேரா.கே.என்.அப்துல் காதர் நிஹால் மற்றும் உடற்கல்வி இயக்குநர் பி.எஸ்.ஷாயின்ஷா ஆகியோர் உள்ளனர்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP268/2013-15

Cable: MONOPOLY POST BOX No. 3748
**Majestic Motors**
117, GENERAL PATTERS ROAD,
CHENNAI - 600 002
Ph: 28600937 - 28600938

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

சன்மார்க்க பாதையில் சமுதாயப் பணி!
இறைஅருளாளர்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ் வ.மு.செய்யது அகமது B.Com,BL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 99 400 41157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மலர் 27 இதழ் 84 ஹிஜ்ரி 1434 ஷவ்வால் 8 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 31 சென்னை 16 8 2013 வெள்ளி வெளியீடு 17 8 2013 சனி




ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவரும் வேலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.அப்துல் ரகுமான் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகிறார். இடமிருந்து வலமாக கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா, உதவிச் செயலர் எம்.ஜே. ஜமால் முகமது, தாளாளர் மற்றும் செயலர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், தலைவர் எம்.ஜே. நூர்தீன், முன்னாள் தாளாளர் மற்றும் செயலர் எம்.ஜே.எம்.அப்துல் கபூர், பொருளாளர் கே.ஏ.கலீல் அகமது, திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் ஏ.வீரமணி, முன்னாள் முதல்வர் முனைவர் எம்.ஷேக் முகமது மற்றும் சிறந்த மாணவருக்கான விருதினை பெற்றவர்கள் உள்ளனர்.




திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் ஏ.வீரமணி, தலைவர் எம்.ஜே. நூர்தீனிடமிருந்து விருது பெறுகிறார். அருகில் கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா, உதவிச் செயலர் எம்.ஜே. ஜமால் முகமது, தாளாளர் மற்றும் செயலர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க செயலர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் உள்ளனர்.

## முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி

# "திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியால்தான் நாங்கள் வாழ்க்கையில் உயர்ந்துள்ளோம்"

## எம்.அப்துல் ரஹ்மான் எம்.பி. பெருமிதம்

திருச்சி, ஆக. 16—

"திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி வழங்கிய கல்வியால் தான் நாங்கள் உயர்ந்துள்ளோம்" என்று எம்.அப்துல் ரஹ்மான் எம்.பி., கூறினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி 15.08.2013 அன்று காலை கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவரும் வேலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.அப்துல் ரஹ்மான் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

அவர் பேசியதாவது—

"திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் பயின்ற, பயில்கின்ற மாணவர்கள் அனைவரும் தரமானவர்கள். உதவும் குணத்தில் உன்னதமானவர்கள். உலகின் பல்வேறு பகுதிகளில் சிறப்பான பணிகளில் உயர்ந்து கல்லூரியின் புகழை நிலைநாட்டியுள்ளனர். கல்வி பயில விரும்பும் ஏழை எளிய மாணவர்களுக்கு என்றென்றும் சரணாலயமாகத் திகழ்வது எங்கள் ஜமால் முகமது கல்லூரி. ஆண்டுதோறும் முன்னாள் மாணவர் சந்திப்பிற்காக கல்லூரிக்கு வரும் போதெல்லாம், முன்னாள் மாணவர்களாகிய எங்கள் மனம் எழுச்சியுடன் வண்ணப் பறவையாய் மகிழ்கிறது. இக்கல்லூரி தரமான கல்வியை தேசப் பற்றுடன் சேவை நோக்கத்துடன் எங்களுக்கு வழங்கியதால்தான் நாங்கள் இன்று வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்துள்ளோம்."

இவ்வாறு எம்.அப்துல் ரஹ்மான் எம்.பி. குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி ஆட்சி மன்றக் குழுவின் தாளாளர் மற்றும் செயலர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், தலைவர் எம்.ஜே. நூர்தீன், பொருளாளர் கே.ஏ.கலீல் அகமது, உதவிச் செயலர் எம்.ஜே. ஜமால் முகமது, முன்னாள் தாளாளர் மற்றும் செயலர் எம்.ஜே.எம்.அப்துல் கபூர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிங்கப்பூரிலிருந்து எம். அகமது ஜலாலுதீன், முகமது கௌஸ், இத்ரீஸ் அலிம், குவைத்திலிருந்து முனீர் அகமது, எம். ஜாகிர் உசேன், துபையிலிருந்து ஆத்தூர் முகமது காசிம், எச்.ஈ. ஜாபர் சித்திக், எஸ்.கே.எஸ்.ஹமீது ரஹ்மான், எஸ். முகமது ரகமதுல்லாஹ், மலேசியாவிலிருந்து முகமது தஸ்லீம் இப்ராகிம், சீனி நைனா முகமது சையது ஆலம், பெங்களூருவிலிருந்து எம்.அஜ்மல் சேட், ஏ. ஜுல்பிகாருதீன். திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் ஏ.வீரமணி, ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் ஆர்.காதர் மொய்தீன், டி.என்.பி.எல் நிறுவனத்தின் இயக்குநர் ஆர்.மணி, திண்டுக்கல் கே.பி.தேசியக் கல்லூரியின் முதல்வர் முனைவர் எம்.அலியார், இந்திய வங்கி, திருச்சி மண்டல மேலாளர் ஏ.ராமு, மயக்க மருந்து நிபுணர் (அனஸ்தியாலஜிஸ்ட்) டாக்டர் பி.விஜயகுமார், புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரி முதல்வர் முனைவர் டி.ஜெயப்பிரகாசம், கோயம்புத்தூர் காவல்துறை உதவி ஆணையர் எச்.எம்.சாகுல் ஹமீது, திருச்சி இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் உதவி மேலாளர் டி. ஜெயப்பிரகாஷ், சென்னை தேசிய தகவல் மைய தொழில்நுட்ப இயக்குநர் ஏ.முகமது மைதீன், நாமக்கல் முதுகலை பட்டதாரி ஆசிரியர் ஏ.பி.ராஜேந்திரன் ஆகியோர் ஜமால் முகம்மது கல்லூரியின் சிறந்த முன்னாள் மாணவர் விருதினைப் பெற்றார்கள்.

முன்னதாக துணை முதல்வர் முனைவர் எஸ். முகம்மது சாலிஹ் வரவேற்புரையும், கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.எம்.முகமது சிந்தாஷா தலைமையுரையும் நிகழ்த்தினர்.

முதல்வர் தம் உரையில், முன்னாள் மாணவ சங்கத்தினர் அளித்த பங்கினையும் கல்லூரியின் முன்னேற்றத்தையும் மற்றும் சாதனைகளையும் குறிப்பிட்டார்.

ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க செயலர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் சங்க ஆண்டறிக்கை வாசித்தார்.

மேலாண்மைத்துறை இயக்குநர் மற்றும் சுயநிதிப்பிரிவு நிதியாளுனர் முனைவர் கே. அப்துஸ் ஸமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் மற்றும் வருகைப் பதிவு பதிவாளர் கே.என்.அப்துல் காதர் நிஹால், நிதியாளுனர் மற்றும் வேதியியல் துறைத் தலைவர் முனைவர் எம். முகமது சிகாபுதீன், இயற்பியல் துறைத் தலைவர் எம்.ஜமால் முகமது ஜாபர், விலங்கியல் துறைத் தலைவர் முகமது சம்சுதீன், காஜாமியான் விடுதி ஒருங்கிணைப்பாளர் பேரா.ஏ.முகமது சலீம் ஆகியோர் விருது பெற்றவர்களை அறிமுகம் செய்தனர்.

முன்னாள் முதல்வர் முனைவர் எம்.ஷேக் முகமது மற்றும் முன்னாள் மாணவர் சங்க சென்னைப் பகுதியின் தலைவர் எஸ்.எம்.ஹிதாயத் துல்லாஹ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிறைவாக கல்லூரியின் கூடுதல் துணை முதல்வர் முனைவர் .ஏ. முகமது இப்ராகிம் நன்றியுரை நிகழ்த்தினார்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040, போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

சன்மார்க்க பாதையில் சமுதாயப் பணி!
இறைஅருளாளர்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ். வெ.மு.செய்யது அகமது B.Com.,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 99400 41157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-93 ஹிஜ்ரி 1434 ஷவ்வால் - 17 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஆவணி-9 சென்னை 25-8-2013 ஞாயிறு வெளியூர் 26-8-2013 திங்கள்



திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் காஜா மியான் ஹாக்கிப் போட்டி சுழற்கோப்பைக்கான தொடக்க விழாவில் உதவி செயலர் எம்.ஜே. ஜமால் முகமது, தாளாளர் மற்றும் செயலர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், முன்னாள் தாளாளர் மற்றும் செயலர் எம்.ஜே.எம். அப்துல் கபூர், பொருளாளர் கே.ஏ.கலீல் அகமது, முதல்வர் முனைவர் ஏ.எம். முகமது சிந்தாஷா, மேலாண்மைத்துறை இயக்குநர் மற்றும் சுயநிதிப் பிரிவு நிதியாளுனர் முனைவர் கே.அப்துஸ் ஸமது, உடற்கல்வி இயக்குநர் முனைவர் பி.எஸ். ஷாயின்ஷா ஆகியோர் உள்ளனர்.

Since 1951

# JAMAL MOHAMED COLLEGE

**(AUTONOMOUS)**

**College with Potential for Excellence**

**Accredited with 'A' Grade by NAAC-CGPA 3.6 out of 4.0**

**(Affiliated to Bharathidasan University)**

**TIRUCHIRAPPALLI – 620 020**

## ANNUAL ALUMNI GET TOGETHER (NOSTALGIA) HELD ON 15TH AUGUST 2013



Dr.S.Mohamed Salique, Vice Principal Welcomes



Dr.S.Ismail Mohideen, Secretary, Alumni Association presents the Annual Report



Our Beloved Principal Delivers Presidential Address



Our Secretary honours Janab. M.Abdul Rahman, M.P


Our Principal honours our Secretary and Correspondent



Our Vice Principal honours our President



Our Addl. Vice Principal honours Treasurer



Our Vice Principal (SF) honours our Assistant Secretary



Secretary of Alumni Association honours our former Secretary




Our Chief Guest Janab. M.Abdul Rahman, M.P speaks



Our Hon'ble Secretary with Janab. M.Abdul Rahman, M.P




Director of management Studies introduces the awardees




Our Joint Director of Collegiate Education receives the award




Our Former Principal receives the award



Mr. Athur Mohamed Kasim receives the award




Mr.K.N.Abdul Kader Nihal introduces the awardees



Mr. M. Ahamed Jalaludeen receives the award




Our Principal presents the award to Mr. A. Ramu




Dr. B. Vijayakumar receives the award



Dr. T. Jayaprakasam receives the award



Dr.M.Mohamed Sihabudeen introduces the awardees



Mr. Mohamed Ghouse receives the award


Mr. M. Ajmal Sait receives the award


Mr. Zulfikarudeen receives the award


Dr. Venkatesan Jayakumar receives the award



Dr.M.Jamal Mohamed Jaffar introduces the awardees


Mr.T.Jayaprakash receives the award


Mr. H. M. Shahul Hameed receives the award


Dato Haji. Mohamed Thasleem Ibrahim receives the award


Mr. A. Mohamed Mydeen receives the award



Dr. Mohamed Shamsudin introduces the awardees



Mr. Muneer Ahmed receives the award


Mr. Idris Malim receives the award


Mr.S.K.S. Hameed Rahman receives the award


Mr. H.E.Jaffar Siddique receives the award



Mr. A.Mohamed Saleem introduces the awardees


Mr. M. Zahir Hussain father's receives the award


Mr. Rafi Ahamed receives the award



A Cheque received by our Secretary & Correspondent from Singapore Chapter




A Cheque for Scholarship is received by the Secretary



Financial Contribution from Kuwait Chapter



Dedicated Alumni Distributes a Cheque from UAE Chapter




Mr.Mustaq presents a cheque for Scholarship




Our Hon'ble Secretary offers felicitation




Our Former Principal felicitates the gathering



An alumnus releases a book



Our Addl. Vice Principal proposes vote of thanks


A section of audience



## திருச்சி

# ஜமால் முகமது கல்லூரியில் கருத்தரங்கம்

திருச்சி, செப். 22-

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ''நிதி உள்ளடக்கம், இணை வளர்ச்சிக்கான ஒரு வழி'' என்ற தலைப்பில் நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்கின் தொடக்கவிழாவில் உரையாற்றிய சென்னை மத்திய ரிசர்வ் வங்கியின் மண்டல இயக்குநர் முனைவர் சதக்கத்துல்லா, நிதி உள்ளடக்கம் என்பது சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் குறிப்பாக ஒதுக்கப்பட்ட மற்றும் குறைந்த வருவாயுடைய மக்களுக்கும் நிதிப் பொருட்களும், சேவைகளும் கிடைக்கத்தக்க வகையில் அமைவதாகும். அவருடைய கூற்றுப்படி, நிதிப் பொருட்களின் நிறைவு, கிடைப்பு, விழிப்புணர்வு, செலவிடும் திறன் மற்றும் அணுகுமுறைகளை உறுதி செய்யும் நிதி உள்ளடக்கத்தின் தேவையைத் தூண்டும் பல்வேறு விதமான நிதி கல்வியறிவு நிகழ்ச்சிகளை மத்திய ரிசர்வ் வங்கி நடத்துகிறது என்றார்.

கருத்தரங்கின் மையக்கருத்தை அறிமுகப்படுத்தி உரையாற்றிய முனைவர் எம். ஷேக் முகம்மது, ஏழைகளின் மீது கருணை கொண்ட பொருளாதார வளர்ச்சியின் மீதான ஆர்வத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார். கல்லூரியின் முதல்வர் முனைவர், ஏ.எம். முகம்மது சித்தாஷா தனது தலைமையுரையில், நிதி உள்ளடக்கமானது, இந்தியா போன்ற நாடுகளில், சரியான முறையில், வடிவமைக்கப்பட்ட நிதிச்சேவைகளை எளிதான முறையில் அணுகக்கூடிய வழிவகைகளை உருவாக்கும் அறிவாகவும், நிதித்துறை வளர்ச்சியில் ஈடுபடும் கொள்கை வடிவமைப்பாளர்களுக்கும், கட்டுப்பாட்டாளர்களுக்கும் முன்னுரிமை பெற்ற ஒரு விஷயமாகவும் விளங்குகிறது என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் இதழை வெளியிட்டுப் பேசிய கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், ஒவ்வொரு தனி மனிதனும், நிதி உள்ளடக்கத்தில் இடம்பெற்றால் மட்டுமே உண்மையான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்று குறிப்பிட்டார். பங்கேற்பாளர்களின் ஆய்வுக்கட்டுரைகள் நிகழ்ச்சியின் இதழில் தொகுக்கப்பட்டிருந்தன. பொருளாளர் ஏ.கே.கலீல் அகமத் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். சென்னை மத்திய ரிசர்வ் வங்கியின் துணைப் பொதுமேலாளர் எஸ்.தியாகராஜன் நிதி உள்ளடக்கத்திற்கான பல்வேறு பிரச்சனைகள் மற்றும் சவால்கள் குறித்து சிறப்பு சொற்பொழிவாற்றினார். கல்லூரியின் துணைச்செயலாளர் எம்.ஜே.ஜமால் முகம்மது வாழ்த்துரை வழங்கினார்.

# தினமலர்

நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்

திருச்சி • வியாழன் • அக்டோபர் 3 2013

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்


# உயர்ந்த நோக்கம் இருந்தால் உலகம் உங்கள் பின்னால் அணிவகுக்கும்

## இறையன்பு ஐஏஎஸ் பேச்சு

**திருச்சி, அக். 3-**

உயர்ந்த நோக்கம் இருந்தால் உலகம் உங்கள் பின்னால் அணிவகுத்து நிற்கும் என்று இறையன்பு ஐஏஎஸ் பேசினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி சிவில் சர்வீஸ் தேர்வு பயிற்சி மையம் சார்பில் சிறப்பு சொற்பொழிவு கல்லூரி முதல்வர் முகமது சிந்துஷா தலைமையில் நடந்தது.

மாணவர்கள் சிவில் சர்வீஸ் தேர்விற்கு தயாராவது குறித்து அரசு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மை செயலாளர் இறையன்பு ஐஏஎஸ் பேசியதாவது:

கல்லூரியில் படிக்கும் போதே மாணவர்கள் சிவில் சர்வீஸ் தேர்விற்கு தயார் செய்து கொள்ள தினமும் 3 மணி நேரம் ஒதுக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் தேர்வு எழுதுவதற்கும், சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு.

எந்த பணியில் இருந்தாலும் உயர்ந்த நோக்கம் இருந்தால் உலகம் உங்கள் பின்னால் அணிவகுக்கும். சிவில் சர்வீஸ் பணியில் சேர விரும்புபவர்கள் முதன்மை தேர்வில் பொது அறிவு, சமயோசிதம் ஆகியன குறித்தும், பிரதான தேர்வில் ஆங்கிலம், விருப்ப பாடம், நாட்டின் தற்போதைய நடப்பு, அறிவியல், வரலாறு, குறித்து தேர்வுகள் எழுத வேண்டும்.

இந்த தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் நேர்காணல் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். பல்கலைக்கழக தேர்வில் குறிப்பிட்ட பாடங்களை மட்டும் படித்து எளிதாக வெற்றி பெற முடியும். ஆனால் சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுபவர்கள் உலக நடப்புகளை முழுவதுமாக தெரிந்து கொள்வது, அன்றாடம் செய்தித்தாள்கள் படிப்பது, பாடங்களை மனப்பாடம் செய்யாமல் புரிந்து கொண்டு படிப்பது, நேர்காணலில் உண்மை நிலையை கூறுதல், அர்ப்பணிப்பு, கடும் உழைப்பு இருந்தால் வெற்றி பெற முடியும்.

நேர்காணல் தேர்வில் பதில் கூறும் போது தன்னம்பிக்கை, தெளிவு, அறிவு ஆற்றல், பதிலில் முதிர்ச்சி, ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும். சிவில் சர்வீஸ் தேர்வில் காவல் துறையை தேர்ந்தெடுக்க விரும்புபவர்கள் தங்களின் உடல் அமைப்பிற்கு முக்கியத்துவம் தர வேண்டும். சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுபவர்களுக்கு தமிழில் எழுதும் வாய்ப்பு இருந்தாலும் தங்களின் ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சிவில் சர்வீஸ் தேர்விற்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்ற பணிகள் கிடைக்காவிட்டாலும் குரூப்-1 மூலம் சிறந்த அரசு பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். துல்லியமாக திட்டமிடுதல், கடின உழைப்பு, இருந்தால் சிவில் சர்வீஸ் தேர்வில் மாணவர்கள் வெற்றி பெற முடியும் என்றார்.

நிகழ்ச்சியில் மாணவர்கள்-இறையன்பு கலந்து கொண்ட கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் காஜாநஜீமுதீன், துணை முதல்வர் முகமது சாலிக் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒருங்கிணைப்பாளர் மசூர் நசீப்கான் வரவேற்றார். உதவி பேராசிரியர் சையது முகமது நன்றி கூறினார்.




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த சொற்பொழிவு நிகழ்ச்சியில் சிவில் சர்வீஸ் தேர்வு குறித்து அரசு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மை செயலாளர் இறையன்பு ஐஏஎஸ் பேசுகிறார். அருகில் கல்லூரி முதல்வர் முகமது சிந்துஷா, செயலாளர் காஜாநஜீமுதீன் மற்றும் பலர்.

தினகரன்

# திருச்சி

● வியாழக்கிழமை ● 3.10.2013


காந்தி முகமூடியுடன் மது ஒழிப்பு பிரசாரம் பக்கம் 18

பால் சப்ளை பாதிப்பு மக்கள் கடும் அவதி பக்கம் 19

**வானிலை**

| இன்று | |
|---|---|
| அதிகபட்சம் | குறைந்தபட்சம் |
| 36 C / 96.8 F | 24 C / 75.2 F |
| **நாளை** | |
| அதிகபட்சம் | குறைந்தபட்சம் |
| 36 C / 96.8 F | 23 C / 73.4 F |

இன்று வானம் மேக மூட்டத்துடன் காணப்படும், சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**இந்த நாள்...**

- **விஜய வருடம்.** புரட்டாசி மாதம் 17ம் நாள், வியாழக்கிழமை, தேய்பிறை.
- **திதி: திரயோதசி** காலை 6.50 வரை; பிறகு **சதுர்த்தசி.**
- **நட்சத்திரம்: பூரம்** மாலை 4.29 வரை; பிறகு **உத்திரம்.**
- **யோகம்:** மாலை 4.29 வரை **சித்தயோகம்** பிறகு **மரணயோகம்.**
- **நல்ல நேரம்:** காலை 9-12, மாலை 4-7, இரவு 8-9 மணி வரை.
- **ராகு காலம்:** மதியம் 1.30 முதல் 3.00 மணி வரை. **எம கண்டம்:** காலை 6 முதல் 7.30 மணி வரை




POSTAL REGD. No. TRY/057/2012-2014





▶ திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் ஐஏஎஸ் அதிகாரி இறையன்பு பேசுகிறார். அருகில் கல்லூரி தாளாளர் காஜாநஜிமுதீன், முதல்வர் சிந்துஷா.

### சவால்களை சந்திக்கும் குணம் கொண்ட

# மாணவர்கள் சிவில் சர்வீஸ் தேர்வில் பங்கேற்க வேண்டும்

## ஐஏஎஸ் அதிகாரி இறையன்பு பேச்சு

திருச்சி, அக். 3: சவால்களை சந்திக்கும் குணம் கொண்ட மாணவர்கள் சிவில் சர்வீஸ் தேர்வில் பங்கேற்க வேண்டும் என்று ஐஏஎஸ் அதிகாரி இறையன்பு பேசினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சிவில் சர்வீஸ் தேர்வு பற்றிய கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. இதில் ஐஏஎஸ் அதிகாரி இறையன்பு கலந்து கொண்டுபேசுகையில், அரசாங்கத்தில் உள்ள அனைத்து துறைகளிலும் உயர்ந்த பதவியில் உள்ளவர்கள் அனைவரும் சிவில் சர்வீஸ் தேர்வெழுதிவெற்றிபெற்றவர்கள். ஏழை மக்களுக்கு பணியாற்றுதல், பயணங்களைவிரும்புபவர், தாங்கள்செய்யும் வேலைகளில் ஏற்படும் சவால்களை சந்திக்கும் குணம் உள்ள மாணவர்கள்சிவில்சர்வீஸ்தேர்வில்பங்கேற்க வேண்டும். மாணவர்கள் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே குறிப்பெடுத்துபடிப்பது நூலகத்தைபயன்படுத்துவது, ஆங்கிலத்தில் மொழித்திறனைவளர்த்தல், செய்தித்தாள்கள் வாசித்தல், அன்றாடம் நிகழும் முக்கிய நிகழ்வுகளை சக மாணவர்களுடன் விவாதிப்பது என தினமும் குறைந்தது3மணிநேரம்இதுபோன்ற பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். தேசிய மற்றும் உலகம் பற்றிய தகவல்களை தெரிந்துகொள்வதும், பொது அறிவை வளர்த்துக்கொள்வதும், நாட்டு நடப்பை தெரிந்துகொள்வதும்அவசியமானது. சிவில்சர்வீஸ் தேர்வில் மாணவர்கள் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள், எனவே மாணவர்கள் ஒவ்வொருமதிப்பெண்ணும்மிகமுக்கியம் என்பதை கருத்தில் கொண்டு திட்டமிட்டு படிக்கவேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் கல்லூரியின் தாளாளர்காஜாநஜீமுதின், முதல்வர் முகமது சிந்தஷா, கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

Phone: 25588855 / 42817251 / 26736607
Cell: 94444 63800 / 9042660299
KHAN CHICKENS
1024, 15th Street, M.K.B. Nagar,
Chennai - 600 039
www.khanchickens.com

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

சன்மார்க்க பாதையில் சமுதாயப் பணி!
இறைஅருளாளர்
வடக்குக்கோட்டையார்
வ.மு.செய்யது அகமது
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை

மணி-27 சுடர்-133 ஹிஜ்ரி 1434 துல்கஃதா - 27 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 புரட்டாசி-18 சென்னை 4-10-2013 வெள்ளி வெளியூர் 5-10-2013 சனி

### திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் கலந்துரையாடல்:

# ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றி பெற தயாராவது எப்படி?

## இறையன்பு ஐ.ஏ.எஸ். விளக்கம்

திருச்சி, அக். 4—

ஆட்சிப்பணி தேர்வில் வெற்றி பெற தயாராகுவது எப்படி ? என மாணவர்களுடன் இறையன்பு ஐ.ஏ.எஸ் கலந் துரையாடினார்.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். பணி களுக்கான ஆட்சிப்பணி தேர்வில் வெற்றி பெறுவது குறித்த சிறப்பு கலந்துரையாடல் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி தாளாளர் காஜா நிஜா முதீன் தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு புள்ளியல் மற்றும் பொருளியல் முதன்மை அதி காரி இறையன்பு ஐ.ஏ.எஸ். கலந்து கொண்டு பேசியதா வது

இந்திய ஆட்சி பணியில் ஒருவர் தேர்ச்சி பெற்று பதவி வகித்தால் நாட்டின் பல பகுதியில் பல்வேறு துறைகளில் அனைத்து மக் களையும் சந்திக்கும் அனுபவம் கிடைக்கிறது. இதன் மூலம் அறிவு முதிர்ச்சி பெற்றவர் களாகவும், முடிவு எடுப்பவர் களாகவும் திகழ முடியும். மக்களுக்கு பணியாற்ற வேண்டும் என்ற என்ற உயர்ந்த நோக்கம் கொண்டவர்களாக திகழ வேண்டும். இந்திய ஆட்சி பணி சவால்கள் நிறைந்த பணியாகும்.

இந்திய ஆட்சி பணி 3 நிலைகளை கொண்டது. முதல் தேர்வு, பிரதான தேர்வு மற்றும் நேர்முக தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். இந்த தேர்வில் 30 சதவீதம் நாம் தெரிந்த தகவல்களையும், 30 சதவீதம் புரிந்து கொண்ட தகவல்கள், 40 சதவீதம் அலசி ஆராய்ந்து பதில் அளிக்க வேண்டும். மனப்பாடம் செய்து வெற்றி பெற முடியாது.

வரலாறு, சமகால செய்தி களை அலசி ஆராய்ந்து படித்து உலக அளவிலான தொலை நோக்கு பார்வையை வளர்த்து கொள்ள வேண்டும். போட்டி தேர்விற்காக மாணவர்கள் நூலகத்தை முறையாக பயன் படுத்தி மிக நுணுக்கமாக தங்களது நிலைப்பாட்டை எழுத வேண்டும்.

தேர்விற்கு தயாராகும் ஒவ்வொருவரும் 12 மணி நேரம் திட்டமிட்டு படிப்பது மிக முக்கியமான ஒன்றாகும். துல்லியமான தகவல்களை சேகரித்தல், தொடர்ச்சியான தேடல், படித்தவற்றை திருப்பி பார்த்தல், சக மாணவர்களுடன் கலந்துரையாடல் போன்ற வற்றை தொடர்ந்து செய்து வந்தால் ஆட்சி பணி தேர்வில் நிச்சயமாக வெற்றி பெற முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் மாணவர்கள் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கு இறையன்பு ஐ.ஏ.எஸ் பதில் அளித்தார். விழாவில் கல்லூரி முதல்வர் முகமது சிந்தஷா, துணை முதல்வர் முகமது சாலிக் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

மறுமையின் விளைநிலம் இம்மை!
இறைஅருளாளர்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com.,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-148 ஹிஜ்ரி 1434 துல்ஹஜ் - 15 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஐப்பசி-4 சென்னை 21-10-2013 திங்கள் வெளியீடு 22-10-2013 செவ்வாய்

## சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி

# முன்னாள் மாணவர்கள் சங்கம் நடத்திய “இறகுப்பந்து விளையாட்டுப் போட்டி”

சிங்கப்பூர், அக். 21–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாண வர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற சனிக்கிழமை 19–10–2013 அன்று, பிற்பகல் 2 மணி முதல் மாலை 7 மணி வரை, “இறகுப்பந்து விளை யாட்டுப் போட்டி” ஒன்றை சிங்கப்பூர் பூப்பந்தாட்டம் விளையாட்டுக் கூடத்தில் நடத்தியது.

சிங்கப்பூருக்கு பெருமை சேர்க்கும் வகையில் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்கிலும், ஆரோக்கியமான வாழ்விற்கு வழிகாட்டும் வகையிலும் நடத்தப்பட்ட இறகுப்பந்து போட்டியில் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்களாகிய அப்துல் காதர், சஹாபுதீன், நூர் முஹம்மது, அப்துல் கரீம், ஜியாவுதீன் அஹமது, லுக்மான் சேக் தாவூத், முஹம்மது ஹனீப், அஜ்மல் கான் உட்பட இருபது போட்டியாளர்கள் கலந்துகொண் டனர்.

சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கணிதப் பேராசிரியர் அமானுல்லா போட்டியை துவங்கி வைத்தார். விளையாட்டுப் போட்டியின் நடுவர்களாக இத்துறையில் அனுபவமிக்க ஹென்றி டியோ, அகஸ்டின், ரோஸ்தம் ஆகி யோர் பங்காற்றினர். இறுதிப் போட்டியில் வெற்றிப் பெற்ற அப்துல் காதர் மற்றும் சஹாபுதீன் குழுவினருக்கு, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கஜூரா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், தொழிலதிபர் ஹாஜி முஹம்மது நஜ்ரன், முதல் பரிசு கோப்பைகளையும் சான்றிதழ்களை யும் வழங்கி கௌரவித்தார். சிறப்பு விருந்தினருக்கு சங்கத்தின் செயலாளர் அப்துல் சுபஹான் பொன்னாடைப் போர்த்த, துணைசெயலாளர் அப்துல் நஜீர் நினைவுப்பரிசு வழங்கினார். சங்கத்தின் துணைத்தலைவர் கலந்தர் மொஹிதீன் இப் போட்டியை வழிநடத்தினார். சங்கத்தின் செயற்குழு உறுப் பினர்களும், பார்வையாளர் களும் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சி, திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் பெருமையைப் பறைசாற்றும் நிகழ்வாக இனிதே நிறைவுற்றது.



TIRUCHIRAPALLI, FRIDAY, OCTOBER 25, 2013
THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
Regd. TRY/062/2012-2014 • RNI No. TNENG/2004/49966 • ISSN 0971 - 75.. • Vol. 10 • No. 256 • City Edition • .. Pages • Rs. 4.00 • www.thehindu.in



# Young minds find solution for environmental issues




A.K. Khaja Nazeemudeen, Secretary and Correspondent of Jamal Mohamed College, and Cr. Supraja Madhan, Chairperson-TLC No.33, giving away the "Outstanding Youth Environ Scientist 2013" award to students of Equitas Gurukul Matriculation School in Tiruchi on Thursday. – PHOTO: R.M. RAJARATHINAM

Staff Reporter

**TIRUCHI:** A total of 16 educational institutions in the city participated in 'Outstanding Young Environ Scientist 2013', the inter-school competition and environmental workshop jointly organized by Youth Exnora International, Inner Wheel Club of Tiruchi, Trichy Ladies Circle and student's Exnora of Jamal Mohamed College on Thursday.

The one-day event was held at Jamal Mohamed College, as part of the 5th Young Environmental Conference of Exnora.

The teams prepared a power point presentation with an environmental issue and offered solutions for the same. They were questioned and evaluated by the judges . The team with the highest number of points was adjudged the winner.

The prizes were awarded in two main categories – classes 6 to 9 (category I), Classes 11 and 12 (category II) respectively. An additional special award was created to give two prizes to exceptional entries.

Three prizes each were awarded in categories I and II. B. Nithya and M. Subashini of Equitos School bagged the first prize in category I, while Uma Chandru and Jeyachandran Sharmila of SRV School won the first prize in category II.

M. Kaushik Ram of Mahatma Gandhi Centenary Vidyalaya; Ashika and Afrah from SRV School bagged the two special awards.

email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

மனிதன் இறப்பை நோக்கி நடக்கிறான்!
சமுதாயச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-153 ஹிஜ்ரி 1434 துல்ஹஜ் - 20 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஐப்பசி-9 சென்னை 26-10-2013 சனி வெளியீடு 27-10-2013 ஞாயிறு

## பாரதிதாசன் பல்கலை கல்லூரிகளுக்கு இடையே வாலிபால் போட்டி

# திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி 5-வது முறையாக "சாம்பியன்"

திருச்சி அக். 26—

திருச்சி பாரதிதாசன் பல்கலை கல்லூரிகளுக்கு இடையேயான வாலிபால் போட்டி நடந்தது. இதில் அரையிறுதிக்கு, திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரி, மயிலாடுதுறை ஏ.வி.சி., கல்லூரி, அதிராம் பட்டிணம் காதர்மொகைதீன் கல்லூரி என, நான்கு கல்லூரி அணிகள் தகுதி பெற்றது. அரையிறுதி லீக் போட்டிகள், புத்தனாம்பட்டி நேரு கல்லூரியில் நடந்தது.

போட்டியில் ஜமால் முகம்மது கல்லூரி அணி, தான் விளையாடிய,3 போட்டிகளிலும் வெற்றி பெற்று, சாம்பியன் பட்டம் வென்றது. ஜமால் கல்லூரி அணி, ஐந்தாவது முறையாக தொடர்ந்து சாம்பியன் பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மயிலாடுதுறை ஏ.வி.சி., கல்லூரி அணி, 2ம் இடமும், ஒரு போட்டியில் வெற்றி பெற்ற அதிராம் பட்டிணம் காதர்மொகைதீன் கல்லூரி அணி, மூன்றா மிடத்தையும் பெற்றது.

பல்கலை வாலிபால் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற ஜாமல் முகமது கல்லூரி வீரர்களை, கல்லூ ரியின் செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதீன், பொருளாளர் கலீல் அகமது, முதல்வர் முகமது சிந்தாஷா பாராட்டி வாழ்த்தினர்.



email: manichudar786@yahoo.com Ph: 2521 7890 Posted without pre-payment at Egmore Sorting Office. Manichudar (Tamil Daily) RNI 42728/87 REGD. No.TN/CNI GPO/006/2013-2015/TN /PMG(CCR)WPP258/2013-15

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் – நன்மை செய்வோம்

மணிச்சுடர்

நிறுவனர் : சிராஜுல்மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

மனிதன் இறப்பை நோக்கி நடக்கிறான்!
சமுதாயச்செம்மல்
வடக்குக்கோட்டையார்
அல்ஹாஜ்.வ.மு.செய்யது அகமது B.Com,BGL
அறங்காவலர்: வடக்குக்கோட்டையார்
முகம்மது அப்துல்லா அறக்கட்டளை
96,பெரிய தெரு, கூத்தாநல்லூர்-614 101, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 9940041157, இணையதளம்: www.vadakkukottaiyar.com

மணி-27 சுடர்-153 ஹிஜ்ரி 1434 துல்ஹஜ் - 20 பக்கம் 4 விலை ரூ. 3 ஆண்டு சந்தா ரூ.1000 திருவள்ளுவர் ஆண்டு-2044 ஐப்பசி-9 சென்னை 26-10-2013 சனி வெளியூர் 27-10-2013 ஞாயிறு

# திருச்சியில் வாக்காளர் சேர்க்கை விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்

## காஜாமியான், அரசு சையது முர்தசா பள்ளிகள், ஜமால் முகமது கல்லூரி மாணவ–மாணவிகள் பங்கேற்றனர்

திருச்சி, அக்.26–

திருச்சியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் தொடர்பான விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான மாணவ–மாணவிகள் பங்கேற்றனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்–2014 பணி தற்போது நடைபெற்று வருகிறது. வருகிற 31–ந் தேதி வரை இப்பணி வாக்குச்சாவடி மையங்களில் நடத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே கடந்த 6, 20 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டன. வருகிற 27–ந் தேதி 3–வது கட்ட சிறப்பு முகாம் நடக்கிறது.

இதனிடையே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, திருச்சி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் மினி மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது. இதனை கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் முன்னிலையில், போலீஸ் கமிஷனர் சைலேஷ் குமார் யாதவ் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

